# செம்மொழி

செய்தி மடல் 2

திருவள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை - மார்கழி 2008 மே - திசம்பர்



CICTArchives

# செம்மொழி

செய்தி மடல் 2

ஆசிரியர்
பேராசிரியர் க. இராமசாமி

இணையாசிரியர்கள்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் இரெ. குமரன்
முனைவர் ந. அரணமுறுவல்

## பொருள் நிரல்

வாழ்த்துச் செய்தி - திரு அர்ஜுன் சிங் ..... 1
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் - அலுவலகத் திறப்பு விழா ..... 2
கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை ..... 5
செம்மொழி - கனவு மெய்ப்படல் ..... 6
ஐம்பெருங்குழு எண்பேராயம் ..... 8
தமிழ் உயர்தனிச் செம்மொழி - பரிதிமாற்கலைஞர் ..... 10
ஐம்பெருங்குழு எண்பேராயம் - இரண்டாவது கூட்டம் ..... 11
திருக்குறள் முதல் பதிப்பு - பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி ..... 12
இரங்கல் செய்தி ..... 13
தேர்வுக் குழுக் கூட்டம் - ஆய்வு உதவித்தொகை ..... 14
சுவடிகள் தேடுபொறி ..... 15
சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு - தனிநாயக அடிகள் ..... 16
பழந்தமிழ் இலக்கியப் பதிப்பு முன்னோடி சி.வை. தாமோதரம் பிள்ளை - பேராசிரியர் அ. பாண்டுரங்கன் ..... 25

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
6, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை 600 005. தொலைபேசி : 044- 28443222
மின்னஞ்சல்: info@cict.in, director@cict.in, வலைத்தளம் : www.cict.in


CICTArchives




# வாழ்த்துச் செய்தி

## திரு அர்ஜுன் சிங்

மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், இந்திய அரசு



இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஒரு பிரிவாகச் செயற்பட்டுவந்த செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் வளர்ச்சிபெற்றுச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்ற பெயரில் சென்னையில் நிறுவப்பட்டுள்ளமை தமிழ் மொழி வரலாற்றில் பெரிதும் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைச் சென்னையில் நிறுவத் தற்போதைக்கு ஒரு நல்ல கட்டிடத்தையும் பெரும்பாக்கத்தில் பதினேழு ஏக்கர் நிலத்தையும் வழங்கியமைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு நாம் பெரிதும் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

நிறுவனத்தில் செம்மொழி அறக்கட்டளை ஒன்றினை நிறுவும்பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் நல்கியிருக்கும் நற்செயலை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இளம் தலைமுறையினருக்கு உதவும்வகையில் பல்வேறு பயிலரங்குகளை நடத்திவருவதோடு தேசிய, பன்னாட்டு அளவிலான கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றையும் நடத்திவருவதாக அறிகிறேன்.

இந்தியாவிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் ஆய்வறிஞர்கள் வழங்கும் ஒத்துழைப்புடன் நிறுவனம் மேன்மேலும் வளர்ச்சிபெறுமென நம்புகிறேன்.

अर्जुन सिंह
ARJUN SINGH

मानव संसाधन विकास मंत्री
भारत
नई दिल्ली - ११० ००१
Minister of
Human Resource Development
India
New Delhi - 110 001

**MESSAGE**

Shifting of the Centre of Excellence for Classical Tamil (CECT), which was functioning as a part of the Central Institute of Indian Languages (CIIL), Mysore, to Chennai with the name Central Institute of Classical Tamil (CICT) is a major milestone towards language development.

It would be very appropriate to record our gratitude to the Government of Tamil Nadu especially the Hon'ble Chief Minister Kalaignar Dr. M. Karunanidhi for identifying a suitable building for housing the existing staff of the CICT temporarily as well as for allocating about 17 acres of land at Perumpakkam for the new Institute to come up.

I also appreciate the extraordinary gesture on the part of the Chief Minister of Tamil Nadu, who has contributed from his personal funds an amount of rupees one crore to the Institute for establishing a Chemmozhi Trust.

I have been informed that a number of events covering meetings, workshops, training programmes for students, national and international level seminars and conferences have been organized by CICT.

I hope that the activities of the new Institute will gain further momentum with the continued support of scholars from India and abroad.

(ARJUN SINGH)

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## அலுவலகத் திறப்பு விழா

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் 2006 மார்ச்சு முதல் ஓர் உறுப்பாகச் செயல்பட்டுவந்த செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் 2008 மே 19ஆம் நாள் முதல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்னும் பெயரில் தனி நிறுவனமாகச் சென்னையில் இயங்கி வருகிறது.

செம்மொழித் தமிழாய்வுப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாகத் தமிழக அரசு, காமராசர் சாலையிலுள்ள 'பாலாறு' இல்லத்தைச் சீரமைத்து வழங்கியுள்ளது. தமிழக அரசு இந்நிறுவனத்திற்குச் சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி 2008 சூன் 30ஆம் நாள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் தலைமை ஏற்றார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து...

*தமிழுக்குச் செம்மொழி என்கின்ற தகுதி உண்டு. அது மறுக்கப்பட்டதாகச் சொல்லமுடியாவிட்டாலும், அது அனுமதிக்கப்படாத ஒரு சூழல் இருந்ததை மாற்றிச் செம்மொழித் தமிழ் என்ற அந்த அடையாளத்தை, அந்தப் பெருமையை, எங்கள் மொழிக்கு உரிய பெருமையை வழங்க வேண்டும் என்று மத்திய அரசோடு வாதிட்டுப் போரிட வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் நம்முடைய வாதத்திலே உள்ள உண்மையை வாய்மையைப் புரிந்துகொண்ட மத்திய அரசு, குறிப்பாக திருமதி சோனியா காந்தி அம்மையார், பிரதமர் மன்மோகன் சிங், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் ஆகியோர் தந்த ஒப்புதலின் காரணமாக, பரிதிமாற்கலைஞருடைய முதல் குரல் – 150 ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த அந்தக் குரல் இன்றைக்கு வெற்றிவாகை சூடியிருக்கிறது என்றால் அதற்கான நன்றியினை மத்தியப் பேரரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*பரிதிமாற்கலைஞர் அவர்கள், சூரியநாராயண சாஸ்திரி என்றிருந்த அவருடைய இயற்பெயரைப் பரிதிமாற்கலைஞர் என்று தனித்தமிழில், தூய தமிழில் மாற்றிக் கொண்டவர். தமிழ்மொழியின்பால் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் பற்றும் பாசமும் தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் – இருக்கின்ற பெருமையை இன்னும் உயர்த்திக்காட்ட வேண்டுமென்ற நல்லெண்ணமும் வாய்ந்தவர் என்பதை எளிதில் நாம் புரிந்துகொள்ள முடியும். தமிழ் மொழியினுடைய வரலாறு என்கின்ற அவர் எழுதிய அருமையான நூலில் 122, 123ஆம் பக்கங்களில் தமிழ் மொழியைச் செம்மொழி என்று கூறுவதே பொருத்தமாகும் என்று அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட்டு அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் அள்ளி வீசியிருக்கின்றார். அந்த நூல் முழுவதும், அவருடைய கனவை நனவாக்கி அவருடைய ஆசையை நிறைவேற்றிச் செம்மொழி என்ற அந்த நிலையை ஏற்படுத்திய பிறகு மத்திய அரசுக்கு நம்முடைய பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்து, பரிதிமாற் கலைஞருக்கு நாம் காட்ட வேண்டிய*





"பரிதிமாற்கலைஞருடைய முதல் குரல் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த அந்தக் குரல், இன்றைக்கு வெற்றி வாகை சூடியிருக்கிறது என்றால் அதற்கான நன்றியினை மத்தியப் பேரரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்."

நன்றி ஒன்று உளதே என்று எண்ணிப் பார்த்து அவருடைய குடும்பத்தாருக்கு மற்ற தமிழ் எழுத்தாளர்களுக்கு, புலவர்களுக்கு வழங்கியதைப் போல ஒரு நிதி வழங்குவது என்று முடிவுசெய்து தமிழக அரசின் சார்பாக அந்த நிதியை வழங்கியபோது அந்தக் குடும்பத்திலிருந்து 19 உறுப்பினர்கள் தலைமைச் செயலகத்திற்கு வந்து அதைப் பெற்றுச்சென்றார்கள். அந்த 19 உறுப்பினர்களிலே 10 பேராவது கவிபுனையும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். என்னைப் பற்றி, அரசைப்பற்றி, தமிழைப்பற்றி, தமிழகத்தைப்பற்றி அவர்கள் எழுதிய கவிதைகளையெல்லாம் அங்கே படித்துக்காட்டிவிட்டு அவர்களுக்கு அரசின் சார்பில் தரப்பட்ட பதினைந்து லட்சம் ரூபாய் பொற்கிழியைப் பெற்றுச்சென்றார்கள். அப்பொழுதே அவர்களுக்குப் பரிதிமாற்கலைஞர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்குவோம் என்று வாக்களித்து அந்த வாக்கினையும் நிறைவேற்றி வைத்தேன்.

நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் மதுரை மாநகர் சென்று மதுரை நகரத்திற்குப் பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்தில் பரிதிமாற்கலைஞர் பிறந்த ஊரில் - சொல்லப்போனால் ஒரு பெரிய அக்ரஹாரம் - அங்கே பிரமாண்டமான வரவேற்பு அன்றைக்கு எனக்கு வழங்கப்பட்டது. என்னுடைய வாழ்க்கையில் முதல் தடவையாகக் கிடைத்த வரவேற்பு - இன்முகத்தோடு அளிக்கப்பட்ட வரவேற்பு - அன்பு பொழியக் கிடைத்த வரவேற்பு. அந்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டு, வீட்டைச் சென்று பார்த்தால், மிக மிகச் சிறிய இல்லம். நீளவாக்கில் கட்டப்பட்ட ஒரு இல்லம். அந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக ஆக்கிவிட்டு - அங்கே பரிதிமாற்கலைஞருடைய சிலையையும் முகப்பிலே அமைத்துவிட்டு - அங்கிருந்து மதுரைப் பொதுக்கூட்டத்திற்கு நாங்கள் புறப்படவே இயலாத அளவிற்கு அவ்வளவு பெரிய கூட்டம் அங்கே கூடிவிட்டது. அக்கூட்டம் எங்களையெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைத்தது.

அன்றைய தினம் அங்கே எடுக்கப்பட்ட புகைப் படங்கள் எல்லாம் கூட இந்தப் பந்தலிலே மாட்டப்பட்டு, நீங்கள் காண்பதற்குரிய காட்சிகளாக விளங்குகின்றன. பரிதிமாற்கலைஞர் - சூரியநாராயண சாஸ்திரியாகவே இருந்து தனித்தமிழைப் போற்றி - ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் புரட்சிக்கு வித்திட்டார்; என் மொழிக்குச் செம்மொழி என்று பெயர் சூட்டப்பட வேண்டுமென்ற புரட்சிக்கு வித்திட்டார் என்றாலுங்கூட, அதற்கு அடுத்து ஒரு தொடர் முயற்சியாகச் சொல்ல வேண்டுமேயானால் நேற்றைய தினம் விடுதலை பத்திரிகையிலே வந்த செய்தியை உங்களுக்குப் படித்துக்காட்டுகிறேன்.

1918ஆம் ஆண்டு, 'தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக' என்ற ஒரு தீர்மானத்தை நீதிக் கட்சி மாநாட்டிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். 1918 மார்ச்சு 30, 31ஆம் நாட்களில் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் தலைப்பே தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக என்பதாகும். தீர்மான எண் 8 (ஆ). தீர்மான வாசகம்: 'எல்லாப் பழைமையான

CICTArchives





மொழிகளையும் போல, பழைமையான, வளமான, உயர்தரமாக உருவாக்கப்பட்ட, பலதிறப்பட்ட இலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி. இது பல்கலைக்கழகத்தால் பாரசீக, அரேபிய, சமஸ்கிருத மொழிகளுக்கு ஈடாக மதிப்பிடப்பட்டுச் செம்மொழி என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.'

முன்மொழிந்தவர் : திரு ஜே. பி. நல்லுசாமிபிள்ளை, பி.ஏ.,பி.எல்., வழக்கறிஞர், மதுரை.

வழிமொழிந்தவர் : திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார், தமிழ்ப் பண்டிதர், எஸ்.பி.ஜி. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இப்படி 1918ஆம் ஆண்டிலேயே 90 ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான முயற்சி, தொடர்ந்து படிப்படியாகப் பலவகையான கோரிக்கைகள், அழுத்தந்திருத்தமாக வைக்கப்பட்ட கோரிக்கைகள், அதற்காக நடைபெற்ற சிறு சிறு போராட்டங்கள், தமிழக அரசு கொடுத்த குரல், தமிழ் மக்கள் எழுப்பிய முழக்கம் ஆகியவற்றின் தொடர்ச்சியாகத்தான் இந்த முறை நம்முடைய கூட்டணி தமிழகத்திலே தி.மு.கழகத்தின் தலைமையிலே அமைந்த இந்தக் கூட்டணி சார்பாக மத்திய சர்க்காரிடம் இந்தப் பிரச்சினையை எடுத்துவைத்து எங்களுக்கு இந்தத் தகுதியை எங்கள் மொழிக்கு நீங்கள் தந்தாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

அதற்கிடையே பல நிகழ்ச்சிகளில் தமிழகத்திலே நடைபெற்ற பல மாநாடுகளில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு, அதன் தொகுப்பையும் நான் டெல்லியிலே பிரதமரிடத்தில், சோனியா காந்தி அம்மையாரிடத்தில், அர்ஜுன் சிங் இடத்தில் எடுத்துச் சொன்னபோது இதிலே நமக்குள்ள பொறுப்பை, சோனியா காந்தி போன்றவர்கள் எந்த அளவிற்கு மதித்தார்கள், மகிழ்ந்தார்கள், பெருமையோடு பாராட்டினார்கள் என்பதற்குச் சோனியா காந்தி அவர்கள் 8.11.2005இல் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம். அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியை மாத்திரம் படித்துக் காட்டுகிறேன்.

*"I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party"* என்று சோனியா காந்தி அவர்கள் எழுதிய கடிதம் காலாகாலத்திற்கும் நான் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய - நான் என்று தவறாகச் சொல்லிவிட்டேன் நாம் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய ஒரு மடல் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அமைப்பு முதலில் மைசூரில்தான் இருந்தது. மைசூரில் இடம் பெற்றிருந்த இந்த அமைப்பு எல்லா மொழிகளையும் ஆராய்ந்து, எந்தெந்த மொழிக்கு உயர்வு அளிக்கலாம், எந்தெந்த மொழிக்கு உரிமைகளை அளிக்கலாம், சலுகைகளை அளிக்கலாம், வாய்ப்பு வசதிகளை அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்த அமைப்புதான். அது தமிழ்நாட்டிற்கு வந்தாக வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் நம்முடைய அமைச்சர்கள், அஃதன்னியில், கூட்டணியிலே உள்ள நண்பர்கள் இவர்கள் மூலமாகவும் முயற்சிசெய்து மைசூரிலிருந்து இது தமிழ்நாட்டிற்கு, சென்னைத் தலைநகரத்திற்கு வர வேண்டுமேயானால், இதற்கு முதல் முயற்சிசெய்ய வேண்டியவர் அர்ஜுன்சிங் என்பதை அறிந்து, அவரிடத்திலே இதை எடுத்துச் சொன்னபோது, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்தபோது அர்ஜுன் சிங் அவர்கள் தமிழ்நாடு இல்லத்திற்கே வந்து ஒரு தாளைக் கொடுத்து, சென்னையிலே இந்தத் தமிழ் மையத்தினை நடத்திக்கொள்ள அனுமதி என்று கொடுத்துவிட்டுச் சென்றார் என்றால் எந்த அளவிற்குத் தமிழர்களுடைய முயற்சியை நிறைவு செய்வதிலே மத்தியிலே உள்ளவர்கள் ஆவலாக இருந்தார்கள், கடமை ஆற்றினார்கள் என்பதற்கு இதைவிட வேறு எதையும் நான் சான்றாகச் சொல்லமுடியாது.

அலுவலகத் திறப்பு விழாவில் மத்திய மாநில அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஐம்பெருங்குழு எண்பேராய உறுப்பினர்கள், தமிழ்ச் சான்றோர்கள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தினர், தமிழ் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் ஐம்பெருங்குழு உறுப்பினர் முனைவர் ஔவை நடராசன் வரவேற்றார். எண்பேராய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் நன்றிநவின்றார்.

CICTArchives

# கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை

சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தைத் திறந்துவைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சா ஆற்றிய உரையிலிருந்து...

'செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகததில காலூன்றுகின்ற இந்நாளில பரிதிமாற்கலைஞா 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவும் அநதக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவும் இன்று செயலாக்கம் பெறுகின்றது. இதையொட்டி எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை இந்த நிறுவனத்தின் பொறுப்பில் **கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை** நிறுவிட வழங்குகின்றேன். ஆண்டுதோறும் அந்தத் தொகைக்குக் கிடைக்கும் வட்டிததொகையைககொண்டு செம்மொழித் தமிழாயவில் சிறநது விளங்கும் அறிஞாகளுக்கு ஒவவோா ஆண்டும் விருது வழங்கபபடும்.

மத்திய அரசின் சாாபில் வழஙகப்படுகின்ற விருதுகளினின்றும் இவ்விருது வேறுபட்டதாகும்.



2008 சூலை 21ஆம் நாள். மாண்புமிகு தமிழக முதலமைச்சா ஒரு கோடி ரூபாயக்கான காசோலையைச செமமொழித தமிழாயவு மததிய நிறுவனததின பொறுபபு அலுவலா பேராசிரியா ப. மருதநாயகததிடம் வழங்கினாா. அமைச்சாகள் திரு ஆாக்காடு நா. வீராசாமி. திரு க. பொன்முடி திரு எ. வ. வேலு. செயதிததுறைச செயலாளா திரு முததுசாமி. தமிழ் வளாச்சித் துறை இயக்குநா (பொ.) திரு கன்னபுரக்கண்ணன் ஆகியோா உடன் இருந்தனா.

CICTArchives

# செம்மொழி–

## 1856

டாக்டர் கால்டுவெல், தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அரிய ஆய்வு நூலில் திராவிட மொழிகள் அனைத்தினும் உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்குவது தமிழ் என்று குறிப்பிட்டுள்ளார்.

## 1902

பரிதிமாற்கலைஞர் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் இதழில் தமிழ் உயர்தனிச் செம்மொழியே எனச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

## 1918

தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக என்று திருச்சியில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 1919

தமிழ் மொழி ஓர் உயர்தனிச் செம்மொழியே என்று கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் தீர்மானம் நிறைவேற்றினர்.

## 1951

இந்திய அரசின் கல்வி அமைச்சராக இருந்த மௌலானா அபுல்கலாம் ஆசாத் சாகித்திய அகாதெமி மாநாட்டின் தொடக்க விழாவில் ஆற்றிய உரையில் தமிழ் உண்மையாகவே ஓர் உயர்தனிச் செம்மொழி என்று எடுத்துரைத்தார்.

## 1966

மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர். "The Primary Classical Language of the world" என்ற ஆங்கில நூலை வெளியிட்டுச் செம்மொழித் தமிழின் சிறப்பை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

## 2000

கலிபோர்னியாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் உலகில் சிறந்து விளங்கும் செம்மொழிகளில் தமிழும் ஒன்று என்று சான்றுகளுடன் நிறுவியுள்ளார்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மேற்கொண்ட பெருமுயற்சியால் உலகத் தமிழர்களின் ஒரு நூற்றாண்டுக் கனவு மெய்ப்பட்டது.**

## 2004

செப்டம்பர் 17

தமிழுக்குச் செம்மொழி என்னும் சிறப்புத் தகுதி வழங்கப்படுவதாக இந்திய அரசு அறிவித்தது.

## 2004

அக்டோபர் 12

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை வெளியிட்ட அரசு குறிப்பின்வழித் தமிழுக்குச் செம்மொழி ஏற்பளிப்பு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பெற்றது.

## 2005

திசம்பர்

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் நிறுவப்பட்டது.

## 2006

மார்ச்

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் பேராசிரியர் க.இராமசாமி தலைமையில் இரண்டு முதுநிலை ஆய்வறிஞர்கள், பத்து ஆய்வறிஞர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுடன் செயல்படத் தொடங்கியது.

CICTArchives

# கனவு மெய்ப்படல்

## 2006
திசம்பர் 30

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை நிறுவுவதற்கான முதல் கலந்தாய்வுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஐம்பெருங் குழு, எண்பேராயம் ஆகிய இரு அமைப்புக்களின் துணைத்தலைவர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

## 2007
சனவரி

நிறுவனம் தொடர்பான திட்ட வரைவு உருவாக்கப்பட்டு மனித வள மேம்பாட்டு அமைச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 2007
ஆகஸ்டு 13

தில்லியில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டத்தின்போது 11ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 76.32 கோடி நிதி நிறுவனத்திற்கென ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

## 2007
ஆகஸ்டு 18

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு அர்ஜுன் சிங் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைத் தொடங்கிவைத்தார்.

## 2007
நவம்பர் 5

தமிழக அரசின் ஆணையின்படிச் சென்னைப் பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலம் தமிழக அரசால் நிறுவனத்திற்கென ஒதுக்கப்பட்டது.

## 2008
சனவரி 30

தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பிறகு நிறுவனத்தை உருவாக்குவதற்கான பாராளுமன்ற ஒப்புதலுடன் கூடிய இந்திய அரசின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டது.

## 2008
மே 19

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஓர் உறுப்பாக இயங்கிவந்த செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் சென்னைக்கு மாற்றப்பட்டுச் **செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்** என்னும் பெயரில் செயற்படத் தொடங்கியது.

## 2008
மே 23

நிறுவனத்திற்காகப் பெரும்பாக்கத்தில் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ள நிலம் நிறுவனப் பொறுப்பு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## 2008
சூன் 30

'பாலாறு' இல்லத்தில் அமைந்துள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழா மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

## 2008
செப்டம்பர் 30

மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் ஐம்பெருங்குழு, எண்பேராயக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது.

கனவிற் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவின் நல்கியோன் நசைசால் தோன்றல்

*- புறநானூறு : 377*

CICTArchives


# ஐம்பெருங்குழு - எண்பேராயம்

**தலைவர்**




மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி**

**துணைத் தலைவர்கள்**




பேராசிரியர்
**வ. அய். சுப்பிரமணியம்**



பேராசிரியர்
**வா. செ. குழந்தைசாமி**


## ஐம்பெருங் குழு



முனைவர்
**ஔவை நடராசன்**



அறிவியல் தமிழறிஞர்
**மணவை முஸ்தபா**



கவிப்பேரரசு
**வைரமுத்து**



முனைவர்
**பு. பா. இராஜராஜேஸ்வரி**



கவிஞர் **கனிமொழி**
மாநிலங்களவை உறுப்பினர்

CICTArchives


# எண்பேராயம்



முனைவர்
**மா. நன்னன்**




கவிக்கோ
**அப்துல் ரகுமான்**




முனைவர் சிலம்பொலி
**சு. செல்லப்பன்**



கவிஞர்
**வாலி**




பேராசிரியர்
**சாலமன் பாப்பையா**



கவிஞர்
**கா. வேழவேந்தன்**



திரு **து. இரவிக்குமார்**
சட்டமன்ற உறுப்பினர்



பெருங்கவிக்கோ
**வா. மு. சேதுராமன்**

CICTArchives

# தமிழ் உயர்தனிச் செம்மொழி



## பரிதிமாற்கலைஞர் 1870-1903

(வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்)

வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலியன போலத் தமிழ் மொழியும் "உயர்தனிச் செம்மொழி"யாமாறு சிறிது காட்டுவாம். தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பல மொழிகட்குந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே "உயர்மொழி". இவ்விலக்கணத்தான் ஆராயுமிடத்துத் தமிழ், தெலுங்கு முதலியவற்றிற் கெல்லாந் தலைமையும் அவற்றினும் மிக்க மேதகவும் உடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே 'தனிமொழி' எனப்படும். தான் பிற மொழிகட்குச் செய்யும் உதவி மிகுந்தும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியினுதவி களையப்படின், தெலுங்கு முதலியன இயங்குதலொல்லா; மற்றுத் தமிழ்மொழி அவற்றினுதவியில்லாமலே சிறிது மிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்கவல்லது. இஃது இந்திய மொழிநூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ் தனிமொழியே யென்க.

### இனிச் செம்மொழியாவது யாது?

திருந்திய பண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் 'செம்மொழி'யாம் என்பது இலக்கணம். இம்மொழிநூ லிலக்கணம் தமிழ் மொழியின்கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொன்முடிபுகளும் பொருண்முடிபுகளு மின்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதி னுணரவல்லதாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிற பாஷைச் சொற்களன்றித் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இவையும் உயர்தனித் தமிழ் மொழிக்குப் பொருந்துவனவாம். ஆகவே, தமிழ் தூய்மொழியுமாம்.

எனவே, தமிழ் செம்மொழியென்பது திண்ணம். இதுபற்றியன்றே தொன்றுதொட்டுத் தமிழ் மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே, தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ் மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் 'உயர்தனிச் செம்மொழி'யேயாம் என்பது நிச்சயம். இவ்வளவுயர்வுஞ் சிறப்பும் வாய்ந்த அருமைத் தமிழ் மொழியை உன்னாட்டுப் புன்மொழிகளோ டொருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர்தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற்போலத் தென்னாட்டுயர்தனிச் 'செம்மொழி' தமிழெனக் கொண்டுபுகுதலே ஏற்புடைத்தாம்.

*– தமிழ் மொழியின் வரலாறு, 2003, பக். 71, 72*

தலைச்சங்கத்தை ஒவ்வொரு பாண்டியனும் ஏறக்குறைய ஐம்பதைம்ப தாண்டுகளாக நடாத்த அது நடந்து வந்திருத்தல் வேண்டுமென்பதும் இடைச் சங்கத்தை ஒவ்வொரு பாண்டியனும் ஏறக்குறைய அறுபத்து மூன்றறுபத்து மூன்றாண்டுகளாக நடாத்த அது நடந்து வந்திருத்தல் வேண்டுமென்பதும் போதருகின்றன. இச்சங்கங்களிரண்டும் நீடித்த காலம் நடந்து வந்திருக்க வேண்டுமென்பதிலும் பல நூல்கள் இயற்றப்பட்டன வென்பதிலும் பாவலர் பலர் சங்கத்தையொட்டி வாழ்ந்தன ரென்பதிலும் சங்கமிரண்டும் முறையேயிருந்த மதுரையுங் கபாடபுரமுங் கடல் கொள்ளப்பட்டன வென்பதிலும் அது காரணமாகப் பல அரிய தமிழ் நூல்கள் அழிந்துபட்டன வென்பதிலும் ஐயப் பாடில்லை யென்னலாம்.

தமிழ் மொழியின் வரலாறு, 2003, ப.53

CICTArchives

# ஐம்பெருங்குழு – எண்பேராயம் இரண்டாவது கூட்டம்

2008 செப்டம்பர் 30

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில நடைபெற்ற இக்கூட்டத்தில், துணைத் தலைவர் பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் வரவேற்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் நிறுவியுள்ள கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை விருதுகள் குறித்த கலந்தாய்வு நடைபெற்றது.

தொடக்கவுரையாற்றிய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி செம்மொழித் தமிழாய்வுப் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

நிறுவனம் மேற்கொண்ட பணிகள், இனி மேற்கொள்ள வேண்டிய பணிகள், நிதிநிலை ஆகியன குறித்த அறிக்கை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

**மேற்கொள்ள வேண்டிய பணிகள்:**

- நிறுவனத்தைப் பதிவுசெய்தல்
- இயக்குநர், பதிவாளர், நிதி அலுவலர் ஆகிய பணியிடங்களை நிரப்புதல்
- பாலாறு இல்லத்தை நிருவாக அலுவலகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஆய்வுப் பணிகளுக்கும் நூலகத்திற்கும் இன்னொரு கட்டிடத்தை ஏற்பாடு செய்தல்
- 2008-09ஆம் நிதியாண்டில் மாணவர்களுக்கு ஆய்வு உதவித்தொகையும் குறுகிய கால ஆய்வுத் திட்டங்களுக்கு நிதி உதவியும் வழங்குதல், கருத்தரங்கம், மாநாடு, பணியரங்கு, பயிலரங்கு ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துதல்
- கட்டிடக் கலைஞர்களின் உதவியுடன் நிறுவனக் கட்டிடங்களுக்கான திட்ட வரைபடம் ஒன்றைத் தயாரித்தல்
- தொடங்கப்பட்டுள்ள ஆய்வுப் பணிகளை மேலும் விரிவுபடுத்துதல்
- ஆய்வுப் பணிகளுக்கும் நிருவாகப் பணிகளுக்கும் தேவையான பணியாளர்களைப் பணிக்கமர்த்துதல்
- நிறுவனத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை விரிவுபடுத்துதல்



## முதல்வரின் முதல் வருகை

மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு 29.5.08 அன்று முதல்முறையாக வருகைபுரிந்தார். செம்மொழித் தமிழாய்வுப் பணிகள் குறித்து ஆய்வறிஞர்களிடம் கேட்டறிந்தார். நிறுவனத்திற்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்துதருமாறு அரசு அலுவலர்களுக்கு ஆணையிட்டார்.


CICTArchives

# திருக்குறள் முதல் பதிப்பு

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி

### திருக்குறள்

தமிழ் மொழியில் தோன்றியுள்ள பலவேறு நூல்களுள்ளும் திருக்குறளே மிகுதியான பதிப்புக்களையும் ஆய்வு நூல்களையும் பெற்றுப் பெருமையுடன் விளங்குகின்றது. ஏறத்தாழ ஈராயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இதுகாறும் வெளியாகியுள்ளன. இவற்றுள் சற்றொப்ப ஐந்தில் ஒரு பகுதி நூல்கள் பதிப்பு நூல்கள்: ஏனைய ஆய்வு நூல்கள். பன்முறையால ஆராயப்பெறற பெருநூலாகிய திருக்குறளுக்கு எழுந்துள்ள பதிப்புக்கள். உரைநூல்கள். ஆராய்ச்சி நூல்கள். மொழியாக்க நூல்கள். பலவேறு நூலகளிலும் இதழ்களிலும் வெளிவந்துள்ள ஆய்வுக கட்டுரைகள் முதலாயவற்றைப் பொருள்நிரலாகவும காலநிரலாகவும் தொகுத்துப் பார்க்கும்போதுதான் திருக்குறள் ஆய்வு வளர்ச்சிப்போக்கை மதிப்பிட இயலும்.


மூலபாடம்

### திருக்குறள் பதிப்புக்கள்

திருக்குறளுக்கு எழுந்துள்ள பதிப்புககள் குறிதது ஆராய்வது அவ்வகையில் முதறபணியாக அமைகின்றது திருக்குறள் பதிப்புக்களைத் திருக்குறள் மூலம். மூலமும் உரையும் அமைந்த பதிப்புக்கள். பழைய உரைப்பதிப்புக்கள். உரை தழுவிய பதிப்புக்கள். புத்துரைகள். உரைத் தொகுப்புக்கள் எனப் பலவேறு வகையில் பாகுபடுத்தலாம்.

இவ்வனைத்துப் பதிப்புக்களுமாகச் சோ்நது ஏறத்தாழ முந்நூறு நூல்கள் வெளியாகியுள்ளன. கி.பி. 1812 தொடங்கி இன்றுவரை வெளியாகியுள்ள அனைத்துப் பதிப்புக்களையும் ஒரே இடத்தில் தொகுத்துவைப்பது ஆய்வு நோககிறகு மிக இன்றியமையாததாகும்.

### திருக்குறள் முதல் பதிப்பு

திருக்குறளின் மூலப் பதிப்புக்களுள் தமிழில மிகத் தொன்மையான பதிப்பாக இன்று நமக்குக் கிடைப்பது கி.பி. 1812இல் வெளியான 'திருக்குறள் மூலபாடம்' என்னும் தலைப்பில் அமைந்த நூலாகும். 'இலக்கண விலக்கிய வாராய்ச்சியுடையவா்களா லிகிதப் பிழையற வாராய்ந்து சுத்தபாடமாக்கப்பட்டது' என்னும் குறிப்புடனும், 'தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம். மலையப்ப பிள்ளை குமாரன் ஞானப்பிறகாசனால் அச்சிற பதிப்பிக்கப் பட்டது - மாசத் தினச் சரிதையின் அச்சுக்கூடம். இ ஆண்டு கஅகஉ என்னும் குறிப்புடனும் தலைப்புப் பக்கம் திகழ்கின்றது. இந்நூலுடன் நாலடியாா மூலபாடமும் திருவள்ளுவமாலை மூலபாடமும் சோ்த்து வெளியிடப்பட்டுள்ளன.

இப்பதிப்பே திருக்குறள் பதிப்பு வரலாற்றில் முதல் நூலாகத் திகழ்கின்றது. தமிழகத்தில் முதன்முதலாகக் கி. பி. 1712இல் தரங்கம்பாடியில் முதல் அச்சுக்கூடம் ஏற்பட்டது. எனவே, சரியாக ஒரு நூற்றாண்டிறகுப் பின்னா இப்பதிப்பு நமக்குக் கிடைத்துள்ளது.

CICTArchives

# இரங்கல் செய்தி



## நூற்கடல் தி. வே. கோபாலையர் (1925-2007)

புலவர் தி. வே. கோபாலையர் தமிழுக்குக் கிடைத்த அரும்பெருஞ் செல்வமாவார். நடமாடும் கலைக் களஞ்சியம். தொல் தமிழ் நூலகம் என்றெல்லாம் அறிஞர்களால் போற்றப்படும் புலமைக்குரியவர். அறிஞர்களையே வியக்கவைக்கும் ஆழ்ந்த புலமையும். பழந்தமிழ் இலக்கிய ஆய்வில நுணுகி நோக்கும் நுண்ணறிவும் நிறைந்தவர்.

நூற்கடல் கோபாலையர் 1925ஆம் ஆண்டு. சனவரித் திங்கள் 22ஆம் நாள் வேங்கட்ராம ஐயர்-இலக்குமி அம்மாள் இணையருக்குத் திருமகனாகத் தோன்றினார். தமிழ் இலக்கண இலக்கியப் பரப்பில ஆர்வம் மிக்கவராயிருந்த நூற்கடல் கோபாலையர் வித்துவான். பண்டிதம். பி.ஓ.எல்.(ஆனர்ஸ்) ஆகிய பட்டப் படிப்புக்களில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுத்திகழ்ந்தார். கல்விப்பணியைப் பள்ளியில தொடங்கிய இவர் உயர்நிலைப் பள்ளியில் 15 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர்த் திருவையாறு அரசர் கல்லூரியில் 15 ஆண்டுகள் பணியாற்றிய பின் 1979ஆம் ஆண்டு முதல புதுச்சேரிப் பிரஞ்சு இந்தியவியல் நிறுவனத்தில் ஆய்வறிஞராகச் சிறப்பாகப் பணிபுரிந்தார். தொல்காப்பியம். சங்க இலக்கியம். காப்பியங்கள். பக்தி இலக்கியம் ஆகியவற்றை எழுத்தெண்ணிக் கற்றுத்தோர்ந்து 'நூற்கடல்' என்னும் பட்டததிற்குத் தகுதி உடையவராகப் புகழ்பெற்றார்.

ஓய்வறியாது ஆய்வுப் பணிகளில தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட நூற்கடல கோபாலையர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மணிமேகலைக் காப்பியச் செம்பதிப்புப் பணியை ஏற்றுத் திறம்படச்செயலாற்றினார்.


இவர் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளுள் குறிப்பிடத்தக்கதாக இலக்கணப் பேரகராதி (17 தொகுதிகள்) விளங்குகிறது.

நூற்கடல் கோபாலையர் 01.04.2007 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் (1929-2008)

தமிழுலகம் நன்கறிந்த தமிழறிஞர் பேராசிரியர் ச.அகத்தியலிங்கனார் மறைவு தமிழுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். 2008 ஆகஸ்டு 4ஆம் நாள் நிகழ்ந்த ஒரு சாலை விபத்தில் அவர் தம் துணைவியாருடன் இறக்க நேரிட்டது. பேராசிரியர் 79 ஆண்டுக் காலம் இவ்வுலகில் வாழ்ந்து செந்தமிழுக்குத் தொண்டாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். உலக அளவில் தமிழ் உயர்ந்து நிறபதற்குப் பேராசிரியர் ஆற்றிய பணியும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் 1929ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19ஆம் நாள் குமரி மாவட்டத்திலுள்ள கேசவன்புதூர் என்னும் சிற்றூரில் திரு சண்முகம் பிள்ளை - அருணாசலத்தம்மாள் இணையருக்குத் திருமகனாகப் பிறந்தார். தமிழ் மொழி இலக்கிய ஆய்வில் ஈடுபாடு கொண்ட இவர் 1957ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். நாகர்கோயில் இந்துக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். 1964ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக்கழகத்தில் பதிற்றுப்பத்தை மொழியியல் நோக்கில் ஆய்வு செய்து முதல முனைவர் பட்டத்தைப் பெற்றார். அமெரிக்க இந்தியானாப் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது முனைவர் பட்டம் பெற்றார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் ஆய்வு மைய இயக்குநராகப் பொறுப்பேற்றுத் திறம்படப் பணி யாற்றினார். பேராசிரியர் 18 ஆண்டுகள் ஆய்வு நெறியாளராக இருந்து 55 முனைவர்களை உருவாக்கியவர். 26 தமிழ் நூல்களையும் 6 ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளதோடு 170 ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர்.



சிகாகோ பல்கலைக்கழகம் (1963.65) மிச்சிகன் பல்கலைக்கழகம் ஆகியவை பேராசிரியரின் அரிய ஆய்வுப் பணியை ஏற்றுப் போற்றியுள்ளன. 1986 முதல் 1989 வரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்து தமிழுக்கு அணிசெய்தார். 'மொழியியல்' என்னும் காலாண்டு ஆய்வு இதழுக்கு ஆசிரியராக இருந்து பல இளைஞர்களை ஆய்வுப்பணியில் ஊக்குவித்தவர்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

CICTArchives



செம்மொழித் தமிழ் விருதுக்குரிய அறிஞர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் தேர்வுக் குழுக் கூட்டம் 30.6.2008 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. தேர்வுக் குழுவில் முனைவர் மா. நன்னன், எழுத்தாளர் த. ஜெயகாந்தன், மத்திய அரசின் இணைச் செயலாளர் டாக்டர் அனிதா பட்நாகர் ஜெயின், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் பேராசிரியர் உதய நாராயண சிங் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## தேர்வுக் குழுக் கூட்டம்



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வாளர்களுக்கு ஆய்வு உதவித்தொகை வழங்கி வருகிறது. 2008-09ஆம் கல்வி ஆண்டுக்குரிய ஆய்வு உதவித்தொகையைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வுக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 27.12.2008 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தை ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் ஒருங்கிணைத்து நடத்தினார்.

தேர்வுக் குழுவில் முனைவர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் (தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர்) திரு. து. இரவிக்குமார் (எண்பேராய உறுப்பினர் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்), முனைவர் எல். இராமமூர்த்தி (இணைப்பேராசிரியர் மற்றும் ஆய்வு அலுவலர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்), முனைவர் கா. கோ. வேங்கடராமன் (ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்) ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றிருந்தனர்.

## ஆய்வு உதவித்தொகை

ஆய்வு உதவித்தொகை பெறுவதற்குத் தகுதி உடையவர்கள் எழுத்துத் தேர்வு, முதுகலைப் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள், ஆய்வுத்தலைப்பு, இட ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுசெய்யப்பட்டனர். இவ்வாண்டு ஐந்து முனைவர் பட்ட மேலாய்வாளர்களும் பத்து முனைவர் பட்ட ஆய்வாளர்களும் ஆய்வு உதவித்தொகை பெறுகின்றனர்.

முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்

1. முனைவர் அ. ஜெயகுமார்
2. முனைவர் ஜெ. அரங்கராஜ்
3. முனைவர் ந. ஆனந்தி
4. முனைவர் செ. சிலம்புமணி
5. முனைவர் ஜெ. முத்துச்செல்வன்

முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

1. செல்வி ஆர். விஜயபிரியா
2. திரு எம். பரமசிவன்
3. செல்வி எஸ். சுஜா
4. திரு ஆர். இலக்குவன்
5. திரு யு. சண்முகநாதன்
6. செல்வி எஸ். ஹேமா
7. செல்வி ஜே. கீதா
8. திரு வி. பிரகாஷ்
9. செல்வி எஸ். புவனேஸ்வரி
10. திரு எம். தேவராஜ்

CICTArchives

## செம்பதிப்பு

# சுவடிகள் தேடுபொறி




செம்பதிப்பில் ஓலைச்சுவடி ஆய்வு இன்றியமையாதது. இதற்காகச் சுவடியின் மின்பதிவுகளில் புதிய தொழில் நுட்பத்தைச் செம்மொழி நிறுவனம் கையாள்கிறது.

திருமுருகாற்றுப்படை ஓலைப் பக்கம் ஒன்றின் மின் பதிவின் மூன்று நிலைகளைப் படத்தில் காணலாம். ஓலையின் முதல் மின்பதிவு **இயல்பு** ஆகும். அவ்வோலைப் பின்புலத்தை (background) நீக்கிய பதிவு **நிறமாற்றம்** (colour correction) ஆகும். நிறமாற்றத்தினைத் தூய்மைப்படுத்திய இறுதிப் பதிவு **செப்பம்** (Cleaning) ஆகும். ஓலைச்சுவடியில் பயிற்சி இல்லாதவரும் படிப்பதற்கு எளிமையானது செப்பம் ஆகும்.

இக் கணினி நிரல் (programme), நாம் விரும்பும் ஓலை எண்ணைக் கணினித் திரையில் கொண்டு வரும் வாய்ப்பை நல்குகிறது.

கணினித் திரையில் காணப்படும் ஒவ்வொரு ஓலையும் எந்த நிறுவனத்தைச் சார்ந்தது என்ற விளக்கமும் இத்தேடுபொறியில் உள்ளது.

இத்தேடுபொறியானது உரையுடன் கூடிய நூற்றுக்கணக்கான ஓலைகளில் உரிய இடத்தை ஆய்வாளர் கண்டறிந்து பாடங்களைப் படித்தறிய உதவும்.

CICTArchives

# சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு

● தனிநாயக அடிகள்

மற்ற நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டிவரும் இயல்பு இருபதாம் நூற்றாண்டில் விமானப் போக்குவரத்தோடு தோன்றியதோ பண்பு என்று நினைக்க இடமேயில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே தமிழ்ப் புலவர் இப் பண்பைப் பாராட்டிப் பாடுவாராயினர். விரைவான போக்குவரத்தோடு பலவேறு அரசுகளை இணைக்கும் கழகங்களே இல்லாத அக்காலத்திலேயே ஒரு நாட்டவர் மற்ற நாட்டினரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர் என்பதை நாம் அடிக்கடி கூறும் இரு செய்யுட்கள் நமக்கெடுத்து இயம்புகின்றன. கணியன் பூங்குன்றனார் கூறிய

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

எனும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாகி இன்று உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் கோட்பாடாகவும் மிளிர்கின்றது. திருவள்ளுவர் கூறிய.

யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு


*(குறள் 397)*

என்னும் திருக்குறட்பா. முன்பினும் நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுரையாக விளங்குகின்றது. நாடுகள் பல. மக்கள் பலர். வேற்று நாடுகளின் மக்களையும் தத்துவத்தையும் பண்பையும் மொழிகளையும் இலக்கியங்களையும் நம் நாட்டில் உள்ளவைபோல அறிந்திருக்க வேண்டுமாயின் நம் வாழ்நாட்கள் போதாதாதலால். உயிரிருக்கும்வரை அவற்றைக் கற்றுக்கொண்டே இருத்தல் வேண்டும் என்பது உள்ளடங்கும் கருத்தாகும்.

தமிழ் மக்கள் அக்காலத்திலேயே தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் நடுமேற்கு நாடுகளுக்கும் சென்றிருந்தனர் என்பதை வரலாற்று முறையில் அறிகின்றோம். கற்றோர்க்கு எங்குச் சென்றாலும் வரவேற்பு உண்டென்றும் அவர் பல நாடுகளுக்குச் சென்று வந்தனர் என்றும். அந்நாடுகளையும் தம் நாட்டினைப் போலக் கருதினரென்றும் அழகாகப் பழமொழி நானூறு நான்காம் செய்யுள் கூறுகிறது.

ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாகா. தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில.

'ஊர்'. 'நாடு'. 'கேளிர்' எனும் சொற்கள் தமிழ் மொழியின் வெவவேறு காலத்தில் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டிருக்கலாம்: ஆயினும் இம்மேற்கோள்கள்



CICTArchives

காட்டும் பரந்த ஆளுமையும் (Personality) மனித இன நலக் (humanism) கோட்பாடும் இலத்தீன் புலவர் தெறென்ஸ் (Terence) கூறிய 'நான் மனிதன் மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் 'புறமன்று' எனும் அடியொன்றுடனேயே ஒப்பிடத்தகும் (Homo sum; Nil humani a me alienum puto). கோடன் ஒலபோட் (Gorden Allport) எனும் உளநூல் வல்லுநரின் கூற்றின்படிச் செறிவுடைய முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை. முதல்முதல் அத்தகைய மனிதன், என்றும் விரிந்து கொண்டுவரும் ஈடுபாடுகளை வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்; பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் அவன் எவ்வளவிற்குப் பாடுபடுகிறானோ அவ்வளவிற்கு அவன் தன்னுடைய ஆளுமையை விரியச் செய்து செப்பமாக்குகின்றான். இரண்டாவது, பிறர் தன்னை எங்ஙனம் கணிக்கின்றார்களோ அவ்வாறே தன்னை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருத்தல் வேண்டும் (Self-objectification). மூன்றாவது தன்னுடைய வாழ்க்கைக்கு ஒற்றுமை நிறைவினைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (Unifying Philosophy of life-unification).

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால்தான் சமுதாயம் முன்னேறி மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் நல்குகின்றது. இலட்சியங்கள் இல்லாத சமுதாயம் பாழாய்ப்போகும் என்னும் உண்மையைப் பண்டைக் காலத் தமிழரும் நன்குணர்ந்திருந்தனர். இலட்சியம் இல்லாதவன் வெறும் யாக்கை என்பதைப் 'பூட்கை யில்லோன் யாக்கை போல' என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார் புறநானூற்றில் நிலைநாட்டுகின்றார். விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் மக்கள் உள்ளத்தில் என்றும் இருந்தால், சமுதாயம் இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எவ்வளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அவ்வளவிற்கு அவன் ஆளுமை நன்குவளரும். பிறருக்காகப் பணி செய்வதால்தான் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையைப் பண்புடைய வாழ்க்கையாக்குகின்றான். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் குறிக்கோள், வாழ்க்கையைத் தன்னலம் தேடும் துறையிலிருந்தெடுத்து ஆளுமையை நிறைவாக்கும் பண்பாக்குகின்றது. பிறர் நல இயல் (Altruism) எனும் பண்பு மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். நல்ல அறிவு வளர்ச்சியில்லாத சமுதாயத்தில் சொந்த இனத்தாரோடுதான் மனிதன் உறவு கொண்டாடுவான். தன்னுடைய குடும்பத்தையும் தன் சிறு இனத்தையும் (tribe) காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர வளர மக்கள் அனைவரும் எங்கு வாழ்ந்தாலும் தன் இனத்தவரென்றும் எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டுமென்றும் சிந்தனை அவனுக்குத் தோன்றும். வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர் நல இயலைக் கற்பித்து வந்திருக்கின்றன. சீன நாட்டில் கி. மு. 604ஆம் ஆண்டில் பிறந்த லாவோட்சேயும் (Lao-Tse) அவருக்குப் பின்பு கொன்பூசியசும் (கி.மு.551-479) தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கற்பித்துப் பிறர்பாலும் தமக்குப் பொறுப்புண்டு என்னும் உண்மையை வற்புறுத்தினர். ஆனால் பிளாத்தோ, அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ வல்லுநர்கள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்குள் உட்படுத்தி, வேறு நாட்டினரைப்பற்றிக் கவலை செலுத்தவில்லை. பிறநாட்டார் தம் இலட்சிய அரசைக் கெடுக்காவண்ணம், தம் இலட்சிய அரசின் தலைநகரைக் கடலோரத்திலோ துறைமுகத்திலோ அமைக்காது அன்னியர் செல்லாதவாறு பத்துக்கல் கடற்கரையிலிருந்து உள்நாட்டில் அமைக்க வேண்டுமென்று கூறினர். பிராமணத் தருமசாத்திர நூல்கள் பிராமணர் அல்லாதாரைப்பற்றிக் கவனம் செலுத்தவில்லை. பண்டைக்காலத்தில் அவை கூறியது என்னவெனில் 'விந்திய மலைத்தொடர்க்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி; முத்திபெறுவதற்கு அப்பூமியிலேயே பிறந்திருக்க வேண்டும்' என்பதே. தமிழ் மக்களிடமோ, ஸ்டாயிக் வாதிகள் கூறியதுபோலவே மக்கள் அனைவரும் உடன் பிறந்தாரென்றும், பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ வல்லவை அல்லவென்றும் கொண்ட நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது. இந்திய வரலாற்றின் பண்டைக் காலத்திலேயே இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் அறிஞர் கடைப்பிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. எனவே உலக ஒழுக்க இயலை (Ethics) நன்கறிந்து எழுதிய உலகமேதை அல்பேற் சுவைட்சர் திருக்குறளைப்பற்றி 'இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது' என்று கூறுவார்.

ஆனால், இத்தகைய கொள்கைகள் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் மக்களால் மதித்துப் போற்றப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத்தை ஆராயும்பொழுது, இப்பிறர் நலக் கொள்கையையும், பிறர் அன்பு உணர்ச்சியையும் முதல் முதல் பரப்புவதற்குக் காரணமாய் இருந்தவர் தமிழ்நாட்டுப் பாணரும் தமிழ்நாட்டுப் புலவருமாவர். பாணர்க்கும் புலவர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும் அவர்கள் தமிழ் உலகமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஓர் ஒற்றுமை உணர்ச்சி உண்டாகியது. அவர்கள் சிறப்பாகக் கருதிய வள்ளல்களும் அரசர்களும் உளர். போர்க்காலத்தில் தம் சொந்த அரசர்களையும் வள்ளல்களையும் பேணினர்.

"பெருநில மன்னரும் குறுநில மன்னரும் உறவினை வளர்க்கக் காரணமாக இருந்தவை உடன்படிக்கைகளுமல்ல; பொது அரசியல் மன்றங்களுமல்ல; அவர்கள் அனைவரும் வளர்த்த தமிழ் மொழியே காரணமாக இருந்தது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் தமிழகம் என்றும் தமிழ்நாடு என்றும் வாழ்த்தினர்."

ஆயினும் எங்குத் தமிழ் மொழி பேசப்பட்டதோ அங்கெல்லாம் சென்று பரிசில் வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். புலவர் தூதுவராகவும் நண்பராகவும் தமிழ்நாட்டு மன்னர் இடையில் சென்று போரைக் குறைக்கவும் நீதி வளர்க்கவும் முயன்றனர். எனவே, தமிழ் அரசுகளிடம் நட்பும் உறவும் வளருமாறு பாடுபட்டு வந்தனர்.

பெருநில மன்னரும் குறுநில மன்னரும் உறவினை வளர்க்கப் பெரிதும் காரணமாக இருந்தவை உடன்படிக்கைகளுமல்ல; பொது அரசியல் மன்றங்களுமல்ல; அவர்கள் அனைவரும் வளர்த்த தமிழ்மொழியே காரணமாக இருந்தது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் 'தமிழகம்' என்றும் 'தமிழ்நாடு' என்றும் வாழ்த்தினர். இவ்வாறு வாழ்த்தியதால் மூவேந்தருடைய சொந்த ஆட்சியோ குறுநில மன்னருடைய சொந்த ஆட்சியோ குறையவில்லை. தமிழ், தமிழ் ஆற்றல், தமிழ்கெழுகூடல், தமிழ்கெழுமூவர், தமிழ்ப்பாவை, தமிழ்முழுதறிதல், தமிழ் நன்னாடு, தமிழ் நாட்டகம் என்னும் சொற்களும் சொற்றொடர்களும் பன்முறை சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் தோன்றுகின்றன. இச்சொற்கள் தமிழ் அரசரையும் தமிழ் மக்களையும் பெரும்பாலும் குறித்தாலும், தமிழ் இனத்தாரை ஒற்றுமைப்படுத்தும் கருவி தமிழ்மொழி யென்பது தெளிவாகும்.

தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானம்

*(புறம். 19: 2)*

தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்

*(புறம். 51: 5)*

வையக வரைப்பிற் றமிழகங் கேட்ப

*(புறம். 168: 18)*

தமிழ் மூவேந்தரைத் 'தண்தமிழ்க் கிழவர்' (புறம். 35:3) என்றும், தமிழ் நாட்டினை, 'பொதுமை சுட்டிய மூவருலகம்' (புறம். 357) என்றும் தமிழ்ப் புலவர் பாடுகின்றனர். பிற நாடுகளைக் குறிப்பிடும்பொழுது வேற்று நாடோ பிற நாடோ என்று குறித்திடாது, மொழி மாறும் நாடு - மொழி பெயர் தேயம் என்றே வரையறுத்துக் கூறுகின்றனர். பாணர்க்கும், புலவர்க்கும், இவர்கள் கற்பித்த மக்களுக்கும் இருவேறு பற்றுண்டு; ஒன்று தம் சொந்த மன்னற்கும், மற்றொன்று தமிழ்மொழி பேசும் தமிழ் மக்கள் வாழும் முழு நாட்டிற்கும் ஆகும். தமக்குள்ளே தமிழ் மன்னர் அடிக்கடி போரிட்டனர். ஆனால், வேற்று நாட்டவர் தாக்கும்போது, பன்முறை ஒன்று சேர்ந்து 'வடபுல மன்னர் வாடப்' (புறம். 52:5) போரிட்டனர்.

செந்தமிழ்க் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரம் இவ்விருவேறு பற்றினை ஆழமான கருத்துடன் காட்டுகின்றது. தமிழ்ப் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் இக் காப்பியத்தில் அழகாகத் தோன்றுவதுடன் ஒவ்வொரு தமிழ் அரசின் பற்றும் பண்பாடும் மிளிர்கின்றன. வடபுல மன்னர் தமிழ் ஆற்றலை ஏளனம் செய்வதைத் தாங்க முடியாத அரசன், வடமலை மட்டும் படையெடுத்துச் செல்கின்றான்.

அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கு


*(சிலப்.26: 161)*

அருந்தமி ழாற்றல்<br>
தெரியாது மலைந்த கனக விசயர்

*(சிலப்.27: 189-190)*

வடநில மன்னரின் ஏளனத்தைத் தாங்க முடியாத தமிழரசர் தமக்குள்ளே போர் செய்யவும் பின்வாங்கியிருக்கமாட்டார்.

பாணரும் புலவரும் இயற்றிய இலக்கியம் பரவப்பரவப் பிற தமிழ் அரசுகள் பற்றியும் அங்குள்ள மக்களுடைய





CICTArchives

# சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு

வாழ்க்கை பற்றியும் செல்வங்கள்பற்றியும் தமிழ் மக்கள் அறியவந்தனா. அகப் பாடல்களில் ஐந்து நிலங்கள் பற்றியும் புலவா வருணித்ததால் தமிழ்நிலத்தின் பற்று மக்கள் உணாச்சியில் இடம்பெற்று வளா்ந்தது. சங்ககாலத்தின் வரலாற்றைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் போர்கள், நட்புறவு, பேரூர்கள், மலைகள், வழிகள் இன்னோரன்ன செய்திக ளிலிருந்தே அறிகின்றோம். அரசரின் பெயரும் வள்ளல் களின் பெயரும் அவ்விலக்கியத்தில் இருந்தே நமக்குத் தெரியவருகின்றன.

அகத்திணை இலக்கியம் பலவேறு முறைகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளா்த்தது. பெரும்பொழுது, சிறுபொழுது, எல்லா நிலங்களுக்குமான கருப்பொருள் இவற்றையெல்லாம் கட்டாயமான முறையில் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் கற்றுவந்தனா. தொல்காப்பியா நிலத்தைப் பிரித்தமுறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

படுதிரை வையம் பாத்திய பண்பே

(தொல். 948)

பாலை நிலத்துச் செய்யுட்களில் தலைவன் போர்ப் பொருட்டோ, பொருட் பொருட்டோ, கல்விப் பொருட்டோ, தூதின் பொருட்டோ, வேற்று நாடுகளுக்குச் சென்றதால் அந்த அந்த நாடுகளைப்பற்றி நினைப்பதற்கு வாய்ப்பு இருந்தது. மலைகளும், கொடிய விலங்குகள் உள்ள காடுகளும், முரசொலி கொட்டும் கடலும் தான் செல்ல முடியாத இடங்களைப் பற்றித் தலைவிக்கு எண்ணம் உண்டாக்குகின்றன.

களவொழுக்கத்திலும், கற்பொழுக்கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும் குழந்தைகளைப் பேணுவதாலும் இருவருடைய ஆளுமையும் இன்னும் விரிவாக வாய்ப்புண்டு. புலவா் தம் செய்யுட்களில் தலைவன் போலும் தலைவி போலும் செவிலித்தாய் போலும் தோழி போலும் கற்பனை செய்து பாடுவதால் பிறா் தம்மை எவ்வாறு கருதுகின்றனா் என்று அறியும் பண்பும் அவருக்கு எளிதாக அமைந்திருக்க வேண்டும்.

அன்பின் வாழ்க்கையிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் அல்லது பிறா் நல இயலை வளா்ப்பதிலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை தோன்றுகின்றது. ஆய் என்னும் வள்ளலைப் போற்றுவதற்குக் காரணம் என்னவெனின் அவன் நன்மையை நன்மைக்காகவே செய்துவந்தான். பிறா் போற்று வாா்களென்றோ வேறு நலன்களைப் பெறலாமென்றோ அவன் நன்மையில் ஈடுபடவில்லை என்பதே.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.

(புறம்.134: 1-2)

அவா்களுடைய குறிக்கோள் தமக்கென வாழாப் பிறா்க்குரியாளராக வாழ்வதாகும்.

'உண்டாலம்ம இவ்வுலகம்' என்னும் புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக்காட்டுகின்றது. இவ்வுலகம் உண்டு; இவ்வுலகம் உண்டென்பதை மக்கள் அறிவது எங்ஙனம்? இந்திரருடைய அமிழ்தம் கிடைப்பினும் தனியே உண்ணமாட்டார்; புகழெனின் உயிரையும் கொடுத்து வாங்குவா்; பழியென்றால் உலகம் முழுவதையும் பெற்றாலும் செய்யமாட்டார்கள். இத்தகையராகித் தமக்கென வாழாது பிறா்க்கென வாழ்பவா் உலகில் இருப்பதால்தான் உலகம் உண்டு என்று நாம் தெளிவாகக் காட்டலாம்.

உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரா
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியா உண்டலும் இலரே......................

.....................................................

புகழெனின் உயிரும் கொடுக்குவா்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலா்........
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறா்க்கென முயலுநா் உண்மை யானே.

(புறம்.182)

இவ்வுண்மையையே திருவள்ளுவரும்,

பண்புடையாா்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

(குறள். 996)

என்றும் கூறினாா்.

பிறா்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லை யென்றால் நாம் வாழ்வது அரிது. பிறா்க்காக வாழ்வதே உயா்ந்த பண்பும் பண்பாடும்.

பண்புடைமையெனும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பெருமாள் கூறுவாா்: 'பண்புடைமையாவது யாவா் மாட்டும் அவரோடு அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும் அவரவா் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை.



CICTArchives

**"பேரரசர் அசோகனின் காலத்திலேயே தமிழ் அரசுகள் நன்கு இயங்கின. காரவேலனின் கல்வெட்டிலிருந்து (கி.மு. 165) தமிழ் அரசுகளின் ஒற்றுமையும் புலப்படுகின்றது. தமிழகம் ஒதுங்கி ஒரு மூலையில் இருக்கவில்லை என்பதற்குக் கிரேக்கத் தூதர் மெகஸ்தினிசும், கவுடில்யரின் நூலும், வடமொழிக் காப்பியங்களும் சங்க இலக்கியத்தில் நந்தர் மோரியரைக் குறிப்பிடும் இடங்களும் சான்று பகர்கின்றன."**

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போலவர்
மக்கட்பண் பில்லா தவர் (குறள். 997)
நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள் (குறள். 999)

என்று வள்ளுவரே உரைக்கின்றார். திருவள்ளுவரின் கருத்தையும் பிற ஆசிரியரின் கருத்தையும் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஏற்றவாறு விளக்குதல் நம்முடைய கடமையாகும். சிரிப்பு (humour) எனும் பண்பைப்பற்றி 18 நூற்றாண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர் கூறியிருப்பது எவ்வளவு வியப்பைத் தருகின்றது?

மன்னரையும் வள்ளல்களையும் புலவர் வாழ்த்தும்போது அவர்களுடைய வீரத்தைப் புகழ்ந்தேத்துவதோடு அன்னாரின் கொடைவன்மை, காட்சிக்கெளியராதல், 'நீர் அன்ன சாயல்' இப்பண்புகளையும் பாராட்டுகின்றனர். இத்தகைய நல்ல பண்புடைய மன்னரும் வள்ளல்களும் இருக்கும் நாட்டில் மலர்களும் தென்றலும் சுனையும் சிறப்பான நறுமணத்தையும் தீஞ்சுவையையும் இன்பத்தையும் அளிக்கின்றன. எங்கும் இனிதாயிருக்கும் தென்றல் ஓரியின் கானத்தில் தவழ்ந்து வரும்போது இன்னும் இனிதாயிருக்கும். தன்மையுள்ள சுனை பாரியின் பறம்பில் இன்னும் பன்மடங்குத் தண்மையுள்ளதாகும். நெல்லிக்கனியை உண்டபின் தண்ணீரைக் குடித்தால் தீஞ்சுவை நாவிற்குத் தோன்றுகிறது. ஆனால், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணனுடைய சிறு தோட்டத்தில் உள்ள நெல்லிக்கனியை உண்டபின் நீரைக் குடித்தால் இன்னும் பன்மடங்கு அதன் சுவை தெரியும்.

தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவை......................

(அகம். 54: 13-16)

அமெரிக்காவின் பிறர் நல இயலைப்பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்துவந்த 'Pitrim A. Sonokin' என்பவர் ஒரு நூலில் கூறுவது என்னவெனில், மேலைநாட்டுச் செய்தித் தாள்கள் பெரும்பாலும் குற்றவாளிகளையும் தீய செயல்களில் ஈடுபடுபவரையும்பற்றியுமே விளம்பரம் செய்துவருகின்றன; ஆனால் நன்மை செய்பவர்கள் பற்றியும் அவர்களின் நற்செயல்கள்பற்றியும் ஒரு சில செய்திகளே தருகின்றன. சமுதாய இயல் ஆராய்ச்சியும் அவ்வாறே குற்றவாளிகளையும் தீயோரையும் நன்கு படித்து வருகின்றது. ஆனால், தூய வாழ்க்கையில் ஈடுபடும் நல்லோரைப்பற்றிப் படிப்பதில்லை. தூயோர் ஒரு சமுதாயத்தின் ஆக்கப் பண்பைக் காட்டுகின்றவர்; அவர்கள் காட்டும் அன்பும், பற்றும் இல்லையெனில் சமுதாயமே பாழாய்ப் போய்விடும்.

இதுகாறும் வடவேங்கடம் தென்குமரி ஆயிடை உள்ள நிலப்பரப்பில் விரிவான ஆளுமையின் வளர்ச்சியைக் கண்டோம். ஆனால், தமிழ் ஈடுபாடு தமிழகத்தோடு நிற்கவில்லை. பேரரசர் அசோகனின் காலத்திலேயே தமிழ் அரசுகள் நன்கு இயங்கின. காரவேலனின் கல்வெட்டிலிருந்து (கி.மு. 165) தமிழ் அரசுகளின் ஒற்றுமையும் புலப்படுகின்றது. தமிழகம் ஒதுங்கி ஒரு மூலையில் இருக்கவில்லை என்பதற்குக் கிரேக்கத் தூதர் மெகஸ்தினிசும் கவுடில்யரின் நூலும் வடமொழிக் காப்பியங்களும் சங்க இலக்கியத்தில் நந்தர் மோரியரைக் குறிப்பிடும் இடங்களும் சான்று பகர்கின்றன.

சமயமும் வணிகமும் காரணமாக வட இந்தியாவுடன் தமிழ் மக்கள் நெருங்கிய தொடர்பை நிலைநாட்டினார்கள். வட இந்திய வணிகப் பொருள்கள், வடவளம் தமிழ் நாட்டுத் துறைமுகங்களில் குவிந்து கிடந்தன. வடநாட்டுத் தொழில் வல்லுநர் தமிழ்நாட்டு வினைஞரோடு சேர்ந்து அரும் தொழில்களைச் செய்துவந்தனர்.

மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி...

(மணி. 19: 107-109)

வைதிகச் சமயம் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியதும், இமயமலையும், கங்கைப் பேரியாறும் தமிழ் மக்களாலும் ஒருவாறு வணங்கப்பட்டன. பிராமணச் சமயம் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலேயே சமணரும் புத்தரும் வந்து சேர்ந்தனர். தம் சமய நூல்களில் உள்ள சிந்தனையை வடநாட்டு ஆசிரியர் தமிழில் கூறி வந்தனர். இவ்வாறு தமிழ்நாடு வடநாட்டுடன் நெருங்கிய உறவைப் பாராட்டி வந்தது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கூறும் மறுபிறப்புத் தத்துவத்தின் பயனாகத் தமிழ்க் காப்பிய மாந்தர் வட நாட்டில் தோன்றினர்; வடநாட்டவர் தமிழ்நாட்டில் தோன்றினர். கண்ணகியும் கோவலனும் கபிலவஸ்துவில் பிறப்பதாகவும் புத்த சமயத்தைக் கடைப்பிடித்து முக்தி பெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது. கோவலனே முற்பிறப்பில் கலிங்க நாட்டரசன் சேவையில் இருந்ததாகவும், தமிழ்நாட்டில் பிறந்த ஆபுத்திரன் இன்னும் ஒரு பிறவியில் சாவக நாட்டின் அரசனாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளர கங்கையும் இமயமும் அடிக்கடி தொகை நூல்களில் கூறப்பட்டு வருகின்றன. இமயமலை, நீடிக்கும் உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. அதுவே 'பொன்படு

# சங்க இலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு

நெடுங்கோட் டிமயம்.'
புகழ் விரும்புகின்றவர்கள்
இமயக்கோடு போன்ற உயரம்
அளவு அப் புகழை நிலைநாட்ட வேண்டும்.

.......................... இமயத்துக
கோடுஉயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதுஇல யாக்கையொடு மாய்தலதவத தலையே.
(புறம். 214: 11-13)

நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் குமரி ஆறு. காவேரி போன்ற மனல் நிறைநத இடங்களைக் கூறுவதுடன். கங்கையையும் இமயததில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள் புலவர்கள்.

இமயத் தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுணபல துளியினும் வாழிய பலவே.
(புறம். 34: 21-23)

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ்நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்துப் பாடுகின்றனா.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
(புறம். 6: 1-2)

குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின்
(புறம். 67: 6-7)

சில வேளைகளில் இத் தெறகு வடக்கு இணைப்பு. போராலும் வெற்றியாலும் வரும் பயனாகின்றது.

..........................பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சூட்டிய ஏம விறபொறி
(புறம். 39: 14-15)

பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி!
(சிலப். 11: 19-22)

இன்னும் ஒரு புறப்பாட்டு இமயமலையே இவ்வுலகைத் தாங்குகின்றது. ஆனால். தெறகில ஆய் வள்ளலின் குடியிலலையென்றால உலகமே பிறழும் என்கிறது.

வடதிசை அதுவே வான்றோ யிமயம்
தென்றிசை யாஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே.
(புறம். 132: 79)



வட இந்தியாவில தென்னாட்டிறகு இருநத ஈடுபாடு. ஒருவாறு வெளிநாட்டுத் தொடர்புகளும் இருநத காலத்திலேதான். வணிகததின் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து வந்த மக்கள். தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்தார்கள். இப்பிற நாட்டவா துறைமுக நகர்களில் தம் இல்லங்களை அமைத்துத் தம் வணிகத்தை நடத்திவந்தனா. நம் காப்பியங்கள் துறைமுகங்களில பலவேறு மொழிகள் பேசப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றன. இப்பிற நாட்டவரைப் 'புலம்பெயர் மாக்கள்'. 'மொழிபெயர் தேயததோர்'. யவனர் என்றும் வருணிக்கின்றனா. இருவேறு வணிகம் தமிழநாட்டில நடைபெற்று வந்தது. ஒன்று. தமிழ்நாட்டில உள்ள பொருள்களுக்கு (முத்தும் பவளமும் மிளகும்): இனனொன்று. இநதியாவின கிழககே உள்ள நாடுகளிலிருந்து வந்த பொருள்களுக்கு. வங்கத்திலிருந்தும் சீனத்திலிருந்தும் கடாரத்திலிருந்தும் சாவகததிலிருநதும் கப்பலகளில அநத நாடுகளில கிடைதத பொருள்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து இறக்கினா: வசதியுள்ள காலத்திலே அதே பொருள்களை மேற்குத் திசைக்குச் செல்லும் கப்பல்களில் ஏற்றினா. இவ்வணிகம் காற்றைப்

"செனக்கா (Seneca), மார்க்ஸ் அவுரேலியஸ் போன்ற தத்துவஞானிகள் தம் நூல்களில் பல பக்கங்களிலும் பல இடங்களிலும் நேரத்தையும் காலத்தையும் வீண் போக்காது அறத்திலும் மெய்யுணர்விலும் ஈடுபடுதல் வேண்டும்; ஏனெனில், வாழ்க்கை நிலையாதது' என்று வற்புறுத்துகின்றனர். வள்ளுவரோ குறட்பாக்களைக் கையாளுவதால் விரித்து விளக்காது ஒரே அடியில் அதே கருத்தைச் சுருங்கச் சொல்லுவார்."

பொறுத்து நடைபெற்றது. ஒரு பருவக்காற்றோடு கீழ்த் திசையிலிருந்து கொண்டுவந்து இறக்கினர். இன்னும் ஒரு பருவக்காற்றுடன் மேலை நாடுகளுக்குக் கப்பல்களில் ஏற்றினர். இவ்வணிகம் நடைபெறும்பொருட்டு வேற்று நாடுகளிலிருந்து பெருந்தொகையான மக்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்துவந்திருக்கவேண்டும். இவர்களுள் பலர் அராபியர், உரோமர், கிரேக்கர், சீனர், மலாயர் ஆக இருந்திருக்க வேண்டும். இத்தகைய வரலாற்று நிலையில், வள்ளுவருடைய 'யாதானும் நாடாமால் ஊராமால்' என்னும் குறட்பா விரிவான புதிய விளக்கத்தைத் தரவல்லது.

திருக்குறளில் 'பூட்கை மகன்' அல்லது இலட்சிய புருடனுடைய இயல்புகள் பல கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று பிறர்பால் அன்புடைமை.


அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

*(குறள் 72)*

இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளால் ஆளுமையை வளர்த்தல்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

*(குறள் 81)*



பகைவருக்கும் நன்மை செய்பவன் சான்றோன்.

இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு!

*(குறள் 987)*

பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நட்புப் போன்ற அதிகாரங்களில் இச்சான்றோரின் இயல்புகள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலனிடமிருந்து பிரிந்திருந்த காலத்திற்கு வருந்துவது விருந்தோம்பல் செய்யும் வாழ்க்கையை இழந்ததால்தான்.

அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க்கு கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

*(சிலப். 16 : 71-73)*

தமிழ் மக்கள் 'சான்றோன்' எனப்படும் இலட்சிய மகனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் Sapiens - அறிவுடையோன் எனப்படும் இலட்சிய புருடனைப் போற்றி வந்தனர். இவ்வாறு உலகின் பல பாகங்களில் ஒற்றுமைப் பண்புகளை நாம் காண்டல் கூடும். உரோமையருடைய சாப்பியன்ஸ் அல்லது சான்றோன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்புகளை வளர்க்கவேண்டும்; நடுநிலைமையும் மனம் கலங்காமையும், நொதுமல் தன்மையும் துலக்கமாய்க் கொண்டவன் உரோமையச் சான்றோன். அவன் துன்பத்தால் வருந்துவதும் இல்லை; இன்பத்தால் மகிழ்வதும் இல்லை. அவன் பற்றுகளை அறுப்பவன்; தீயவை செய்யாதவன்.

தமிழ் இலக்கியத்தின் சான்றோன் இருப்பதால்தான் உலகம் இருக்கின்றது. சான்றோர் தம் சான்றாண்மையில் குன்றுவாரெனின் உலகமே தன் தாங்கும் தன்மையில் குன்றும். ஸ்டாயிக்வாதிகளின்படி அவர்களுடைய இலட்சியப் புருடர் ஒரு சிலரே. அச் சிலர் தனிமையாகத் தம் இல்லங்களில் வாழ்ந்து வருபவர். திருக்குறளில் சான்றோரோ பலர். ஒவ்வொரு மகனும் சான்றோனாகுதல் கூடும். அவன் அவ்வாறு ஆவதே கல்வியின் நோக்கம். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆதல் கூடும் என்று எதிர்பார்ப்பாள்.

தன் பிள்ளையைச் சான்றோனாக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும். தமிழ்ச் சான்றோன் சமுதாயத்திலே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான். உரோமருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர். தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தரும். பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனுக்குக் கூறியதுபோல

ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே!

*(புறம். 191 : 6-7)*

# சங்கஇலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு

கிரேக்க உரோம எழுத்தாளர் தம்முடைய ஒழுக்கத் தத்துவங்களைப் பெரும்பாலும் பரந்து விரிந்த உரைநடை நூல்களாகவே எழுதினர். அத்தகைய நூல்களில் ஒரு பொருளைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயவும் எடுத்துக்காட்டுகள், கதைகள் முதலியவற்றைக் கொண்டு விளக்கவும் கூடும். ஆனால், திருக்குறள் குறட்பாக்களாக அமைந்துள்ளது. செனக்கா (Seneca), மார்க்ஸ் அவுரேலியஸ் போன்ற தத்துவஞானிகள் தம் நூல்களின் பல பக்கங்களிலும், பல இடங்களிலும் 'நேரத்தையும் காலத்தையும் வீண் போக்காது அறத்திலும் மெய்யுணர்விலும் ஈடுபடுதல் வேண்டும்; ஏனெனில், வாழ்க்கை நிலையாதது' என்று வற்புறுத்துகின்றனர். வள்ளுவரோ குறட்பாக்களைக் கையாளுவதால் விரித்து விளக்காது ஒரே அடியில் அதே கருத்தைச் சுருங்கச் சொல்லுவார்.

> அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
> பொன்றுங்கால் பொன்றாத் துணை.
>
> *(குறள் 36)*

பிளாத்தோவும் அரிஸ்டோட்டிலும் பல நூல்களில் அரசியலைப்பற்றி விரித்துரைக்கின்றனர். திருக்குறளோ அறுநூறு குறட்பாக்களில் ஆயிரத்து இருநூறு அடிகளில், அரசியலுக்கும் குடிகளுக்கும் பொருந்தும் நீதிகளைக் கூறுகின்றது. பிளாத்தோ, அரிஸ்டோட்டில் காலத்தில் கிரேக்க நாட்டில் பரவியிருந்த கொள்கைகளைப் போலத் தமிழ்நாட்டிலும் நல்ல அரசைபற்றிய கொள்கைகள் வளம் பெற்றிருந்தன என்பதற்குத் திருக்குறளே சான்று. தமிழ்நாட்டில் பரவிய கருத்துகளைத் தம் சிந்தனையின் கருத்துக்களுடன் சேர்த்துத் தம் நூலை யாத்திருக்க வேண்டும் திருவள்ளுவர். வள்ளுவர் கூறும் நீதிகளுக்கு மேற்கொள்ளும் வரலாற்று ஆதாரங்களும் சங்க இலக்கியத்தில் நிரம்பக் கிடைக்கின்றன. மக்கள்நலவாதிக்கு உடல் இன்பமுமுண்டு; மனநல இன்பமுமுண்டு. ஆனால், மனநல இன்பமே மேலானது. புதல்வர் மெய் தீண்டியதால் வரும் இன்பம், அன்னாரின் சிறுகை அளாவிய கூழை உண்பதால் வரும் இன்பம், அன்னாரின் மழலைச்சொற் கேட்பதால் வரும் இன்பம் இவை புலன்களின் இன்பம். ஆயினும் மனநலம், உள்ளத்தின் உவகை, இவை அறத்தின் நோக்கமும் பயனுமாம்.

> அறத்தான் வருவதே இன்பம் *(குறள் 39)*
>
> இருள்நீங்கி இன்பம் பயக்கும் *(குறள் 352)*
>
> மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் *(குறள் 457)*

அரிஸ்டோட்டில் ஒழுக்க உணர்ச்சியை ஒருவனுக்குள்ள இசையைச் சுவைக்கும் உணர்ச்சியோடு ஒப்பிடுகின்றார். இசையை நுகரும் உணர்ச்சி இயல்பாகவே சிலரிடம் மிகுதியாகவும் வேறுசிலரிடம் குறைவாகவும் இருத்தல்கூடும். இசை விரும்புபவன் இசையில் ஈடுபடுவது போல ஒழுக்கத்தை விரும்புபவன் நல்லொழுக்கத்தில் ஈடுபட்டு அதனால் வரும் இன்பத்தைப் பெறுகின்றான். அறச்செயல்களை மீண்டும் மீண்டும் செய்வதால் அறப்பயிற்சி இயல்பாகவே வரும் என்றார் அரிஸ்டோட்டில். அவ்வாறே ஒழுக்கமுடையவர் மறந்தும் தீயவை செய்ய முற்படார் என்கின்றார் வள்ளுவர்.

> ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
> வழுக்கியும் வாயாற் சொலல்
>
> *(குறள் 139)*

பிளாத்தோவின் அரசியலில் வகுப்பு வேற்றுமைகள் பல உள. குடிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றார் பிளாத்தோ - காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு. குடிகள் தம் பிறப்பால் இவ்வகுப்புகளுக்கு உரியவராகின்றனர். பொன்னைத் (பொற்குணங்களை) தம் உடலமைப்பில் மிகுதியாகக் கொண்டவர் பொன் வகுப்பில் இருக்கின்றனர் என்றும், வெள்ளியைத் தம் உடலமைப்பில் கொண்டவர் வெள்ளி வகுப்பில் சேர்ந்தவர் என்றும் இரும்பையும் பித்தளையையும் தம் உடலமைப்பில் கொண்டவர் இறுதியான இரும்பு பித்தளை வகுப்பில் சேர்ந்தவர் என்றும் வகுப்பு வேற்றுமைக்குச் சமாதானம் கூற முடியும் என்பர் பிளாத்தோ. வெள்ளி வகுப்புப் பெற்றோர்க்குச் சிலவேளை பித்தளைக் குழந்தை தோன்றக்கூடும்; சிலவேளை பித்தளைப் பெற்றோர்க்குப் பொன் கலந்த புதல்வன் தோன்றக்கூடும். இவ்வாறு மாறுபட்ட குணங்களுடன் புதல்வர் தோன்றுவாராயின் குணங்களுக்கு ஏற்றவாறு அப்புதல்வர் மேல்வகுப்புக்கு ஏறவும் அல்லது தாழ்ந்த வகுப்பிற்கு இறங்கவும் வேண்டும். இத்தகைய வகுப்பு மாற்றம் அரிதாகவே நிகழக்கூடும். ஆனால், இம்மூன்று வகுப்புகளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் அந்தந்த வகுப்புகளிலேயே வாழ்ந்து தொழிலாற்றி உயிர் துறப்பர். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்க்குக் குடியுரிமைகள் இல்லை; அன்னார்க்குக் கல்வி உரிமைகளும் இல்லை; ஒழுக்க வாழ்க்கைக்கு உரியவர்களாகவும் கருதப்பட்டிலர். ஒருவன் தன் தொழிலிலிருந்து வருவாய் பெறுவானாயின் அவன் அறநெறி வாழ்க்கைக்கு உரியவன் அல்லன் என்பர் அரிஸ்டோடில். தமிழ் நூல்களின் மனப்பான்மையோ உலகளவு பரந்துள்ளது. குடிமையையும் குலத்தையும் போற்றினாராயினும் கல்வியையும் உயர்வையும் ஒழுக்க வாழ்க்கையையும் எவர்க்கும் மறுத்தார் அல்லர் திருவள்ளுவர்.

> மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர்
>
> *(குறள் 973)*

என, சாதிக்கொரு ஒழுக்கம் என்பதை மறுத்தார். மேலும், மக்கள் தாம் பிறந்த குடியை உயரச் செய்வதே அவர்க்கு ஆண்மையும் சிறப்புமென்றும் வரையறுத்தார்.

> நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
> இல்லாண்மை ஆக்கிக் கொளல். *(குறள் 1026)*

வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து மக்கள் அனைவரும் மென்மேலும் முன்னேற்றம் அடைதல் கூடுமென்றும் அவருக்கு முன்னோரிடமிருந்தும் சூழ்நிலையில் இருந்தும்

CICTArchives

# சங்கஇலக்கியத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு

குணங்கள் சில வந்தடைந்தாலும் மக்கள் தம் முயற்சியால் அத் தீய குணங்களை அகற்றுதல் கூடுமென்றும் வள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்ல தில்லை பொருள்

(குறள் 751)

'மதிக்கப்படாதார் அறிவில்லாதார்', இழிகுலத்தார், மதிக்கப்படுவாராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவற்பால் சென்று நிறகப் பண்ணுதல் என்பர் பரிமேலழகர். இக்குறட்பாவை விளக்கி கி. மு. ஐந்து ஆறாம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பிராமணருடைய செல்வாக்கு நன்கு பரவியிருந்தது. இந்தியாவின் வடகிழக்கிலோ துறவறமே சிறந்த வழியாகக் கருதப்பெற்று எண்ணிறந்த துறவறக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இத்துறவறக் குழுக்களுள் சிறந்தவர் மகாவீரரின் சமணர். புத்தருடைய துறவிகள். கோசலருடைய ஆசீவகர் ஆகியோராவர். புத்தருடைய அறிவுரைகளும் அவற்றை விளக்கிய ஏனைய நூல்களும் துறவறமே ஈடேற்றத்திற்கு ஒப்பற்ற வழியென்று வலியுறுத்துவதைக் காண்கின்றோம். சங்க இலக்கியங்களும் திருக்குறளும் இல்லறமே ஒப்பற்ற வழியென்று கூறுவதாகப் பலர் கருதுகின்றனர். துறவறத்தை வள்ளுவர் இணையற்ற வாழ்க்கை நிலையாகக் கூறினாராயினும் இல்லறத்தையே நன்றாக விளக்கி இல்லறமே துறவுக்கும் உறுதுணையாக நிற்பது என்பதை நிலைநாட்டுகின்றார். தருமபதத்துடனும், ஏனைய புத்த நூல்களுடனும் சங்க நூல்களை ஒப்பிடும்பொழுது புத்த நூல்கள் துறவறத்தின் சாசனமாக விளங்க, பண்டைத் தமிழ் நூல்கள் இல்லறத்தின் சாசனமாக விளங்குகின்றன.

உரோமப் பேரரசின் சிந்தனையாளரும் ஏறத்தாழ, தமிழ்ப் புலவரைப் போல அதே காலத்தில் 'ஒன்றே உலகம்' என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர். ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டென்றும், மக்கள் அனைவரும் ஒரே குலத்தவரென்றும், எல்லா உயிர்களும் தொடர்பாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்றும் கற்பித்தனர். ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதல்முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக் வாதிகளால் போற்றப்படுகின்றன. செனக்கா எனும் தத்துவஞானி கூறுவார்: 'ஒவ்வொருவனையும், அவனுக்கு எத்தகைய பண்புகள் இருப்பினும் நான் பொருட்படுத்தி அவன் மகன் ஆதலால் போற்ற வேண்டும். எல்லா மக்களின் நாடுகளும் என் தாய்நாடு என்றும் என் தாய்நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் நாம் கருதல் வேண்டும்'.

மார்க்ஸ் அவுரேலியஸ் என்னும் பேரரசர் கூறுவார்: 'நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அண்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்.'

இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்டன்மையை வளர்க்கவேண்டுமென்று எழுதப்பட்ட நூல் திருக்குறள். திருக்குறளில் தமிழ் என்னும் சொல் ஒருமுறையேனும் தோன்றுவதில்லை. எனவே மக்கள் அனைவரின் புலவர் 'உலகப் புலவர்' என்று போப் அய்யர் திருவள்ளுவரைப் போற்றுவது மிகவும் பொருத்தமாகும்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக்வாதிகளுக்கும் பொதுவான ஒரு நம்பிக்கை. மார்க்ஸ் அவுரேலியஸ் கூறுவார்: 'பகுத்தறிவு இல்லாத விலங்குகளையும் ஏனைய உயிர்களையும் பெருந்தன்மையோடு நாம் நடத்துதல் வேண்டும்.'

"மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக்வாதிகளுக்கும் பொதுவான ஒரு நம்பிக்கை."

உரோமர் எழுதும்பொழுது 'நாம்', 'நம்மவர்' என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். ஆனால், வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் முறையில் தமிழோ தமிழ்நாடோ என்ற குறிப்பேதும் இல்லாமல் உலகெலாம் தழுவுதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

விரிவாகும் ஆளுமையைப் பற்றி ஒரு சில உண்மைகளை இங்குத் தந்துள்ளோம். திருவள்ளுவரோ இரண்டு அறிவுரைகளில் இந்த இலட்சியத்தை எவ்வாறு அடையலாம் என்று காட்டியுள்ளார்.

உள்ளற்க உள்ளம் சிறுகுவ

(குறள் 798)

என்றும்,

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்

(குறள் 596)

என்றும் கற்பித்துள்ளார்.

– **ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்**, 1981, மதுரை

CICTArchives


## பழந்தமிழ் இலக்கியப் பதிப்பு முன்னோடி

# சி. வை. தாமோதரம் பிள்ளை

பேராசிரியர் அ. பாண்டுரங்கன்

இலங்கைத் தீவின் வடக்குப் பகுதியில் யாழ்ப்பாண நகரின் அருகிலுள்ள சிறுப்பிட்டி என்னும் சிற்றூரில் வைரவநாதா-பெருந்தேவியாா என்னும் பெற்றோர்க்குத் தலைமகனாக. சி. வை. தாமோதரம் பிள்ளை 12.09.1832இல பிறந்தார். தமிழ்ப புலமைமிக்க தம தந்தை வைரவநாதரிடம் தொடக்கக் கல்வியைத் தாமோதரம பிள்ளை பெற்றுக்கொண்டார். தமிழ இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். பினனா ஆங்கிலக் கலவி கறக விரும்பித் தெல்லிப்பளையிலிருந்த அமெரிக்க மிஷன் கல்லூரியில் சேர்ந்து பயினறார். புலமையை மேலும் வளாததுக் கொள்ளுமபொருட்டு. யாழ்ப்பாணத்திலிருந்த வட்டுக்கோட்டைப் பல்கலைக்கல்லூரியில் சேர்ந்து கணிதம். தத்துவம். வானவியல முதலிய அறிவியல துறைகளில் பயின்று திறமான புலமை பெற்றார். அப்பலகலைக் கல்லூரியில் 1844ஆம் ஆண்டு முதல் 1852ஆம் ஆண்டு வரை ஒன்பது ஆண்டுகள் பயின்று தலைசிறந்த மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார். தாம் பயின்ற கல்லூரியில் மாணவராக இருந்தபோதே. இவருக்குத் தமிழ் கற்பித்த ஆங்கிலேயரான நெவின்சு என்பார். இவரைப் 'பண்டிதர்' என்று பாராட்டும் அளவுக்குத் தமிழ்ப் புலமையில் இவர் கனிந்திருந்தார்.




உ

நல்லந்துவனார்

கலித்தொகை.

மதுரையாசிரியர் பாரத்துவாசி

நச்சினார்க்கினியார்

உரையோடும்

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பலதேசப்பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

தொண்டைமான் புதுக்கோட்டை மகாராசாவின்

மந்திரியும் பிரதிகாவலருமாகிய

அமாத்ய. அ. சேஷையா சாஸ்திரிகள்

ஸி. ஸ். ஐ.

காருண்யோபகார திரவியத்தைக்கொண்டு

பதிப்பிக்கப்பட்டது.

சர்வஜித்து ஆடிமீ

Copyright Registered.

MADRAS.

ED AT THE SCOTTISH PRESS, BY GRAVES, COOKSON AND CO.

1887.

1852ஆம் ஆண்டு தம் இருபதாவது வயதில் கல்வியை முடித்தவுடன் தாமோதரம் பிள்ளை யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அப்போது குமரகுருபர சுவாமிகளின் நீதிநெறிவிளக்கம் என்னும் நூலுக்குத் தாமே உரையெழுதி அதனை அச்சிட்டு வெளியிட்டார். அதுதான் அவர் முதன்முதலில் பதிப்பித்த நூலாகும். அவருடைய புலமையையும் திறமையையும் கேள்விப்பட்ட பெர்சிவல் பாதிரியார் தாம் சென்னையில் நடத்தி வந்த 'தினவர்த்தமானி' என்னும் வார இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றுமாறு அவரைக் கேட்டுக்கொண்டார். அதன் காரணமாகத் தாமோதரம் பிள்ளை இந்தியாவிற்கு வந்து, சென்னையில் குடியேறினார். அவ்விதழ் வாரந்தோறும் வியாழக் கிழமையில் வெளியாயிற்று. அவ்விதழில் நாட்டு நடப்புகள், இலக்கியம், அறிவியல் போன்ற பலதுறைச் செய்திகள் இடம்பெற்றன. இவ்விதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றியதால் சி. வை. தாமோதரம் பிள்ளையின் அறிவாற்றலையும் எழுத்தாற்றலையும் தமிழ் உலகம் நன்கு அறிந்துகொண்டது.

இதழாசிரியராக இருந்து கொண்டே தாமோதரம் பிள்ளை ஆங்கிலேயர் பலருக்குத் தமிழ் கற்பித்து வந்தார். இவரிடம் தமிழ் கற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சர் வால்டர் எலியட், லூசிங்டன் ஆகியோர் ஆவர். இவருடைய தமிழ்ப் புலமையைப் போற்றிய ஆங்கில அரசு இவரைச் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியில் அமர்த்தியது. சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டவுடன் (1857) அப்பல்கலைக்கழகத்தில் பி.ஏ. தேர்வு எழுதிப் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சிபெற்றார். மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய அவர் பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த மலபார் மாவட்டத்தில் உள்ள கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் சிறப்பாகப் பணியாற்றினார். ஆசிரியப் பணியாற்றிய அவரைச் சென்னை அரசாங்கம் வரவு-செலவுக் கணக்குத் துறையில் ஓர் அலுவலராக நியமித்தது. அவருடைய அறிவின் திறத்தாலும் உழைப்பாலும் மிக விரைவில் பதவி உயர்வு பெற்று வரவுசெலவுக் கணக்குத் துறையின் தலைமை அலுவலராகப் பொறுப்பேற்றார். கணக்குத் துறையில் அலுவலராகப் பணியாற்றிக் கொண்டே தாமோதரனார் 1871ஆம் ஆண்டு சட்டத் தேர்வு எழுதி வெற்றிபெற்று வழக்குரைஞருக்குரிய பி.எல். பட்டமும் பெற்றார். தம் ஐம்பதாவது வயதில் (1882) அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டு நான்கு வருடங்கள் பணியாற்றினார். புதுக்கோட்டை சமஸ்தானத்தின் திவானாகப் பொறுப்பேற்கும்படி இவரை ஆங்கில அரசு கேட்டுக்கொண்டும் தமிழ் நூல்களை அச்சிடுவதில் இருந்த வேணவாவால் அதனை ஏற்க மறுத்துவிட்டுக் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கருப்பூரில் குடியேறினார். அங்கிருந்துகொண்டே ஏடுகள் தேடியதோடு கும்பகோணம் நீதிமன்றங்களில் வழக்குரைத்து அதனால் ஈட்டிய வருவாயைக்கொண்டு தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதில் முழுமூச்சாக இறங்கினார். ஏடு தேடுவதற்குச் சென்னையில் குடியிருப்பதைவிடத் தென்மாவட்டங்களோடு நெருங்கியுள்ள கும்பகோணத்தில் இருப்பது பொருத்தமானது என்று கருதி அவர் கருப்பூரில் குடியிருக்கத் தொடங்கினார். அக்காலக்கட்டத்தில் கும்பகோணம் தமிழ்நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் என்று போற்றும்படி சிறப்பாக இயங்கிற்று.

தாமோதரம் பிள்ளை தம் இளமைப் பருவத்திலேயே நீதிநெறிவிளக்கம் என்னும் நூலுக்குத் தாமே உரையெழுதிப் பதிப்பித்தார் என்று மேலே குறிப்பிட்டுள்ளோம். அவருக்கு நல்லூர் ஆறுமுக நாவலருடன் தொடர்பு ஏற்பட்ட காரணத்தால் தாமும் நாவலரைப் போலப் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்க வேண்டும் என்னும் வேட்கை மீதூரப்பெற்றார். ஆறுமுக நாவலர் அவர்கள் பரிசோதித்துக் கொடுத்த தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையை 1868ஆம் ஆண்டில் தாமோதரம் பிள்ளை வெளியிட்டார். சேனாவரையர் உரையை முதன்முதலில் வெளியிட்ட பெருமை சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களையே சாரும். ஆயினும் தமிழகத்திலும் இலங்கையிலும் வாழ்ந்த சிலர் அவர்மீது அழுக்காறு கொண்டு கோமளபுரம் இராசகோபால பிள்ளை என்பார்

CICTArchives

**தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருளுரை என்று இலக்கண நூல்களைப் பதிப்பித்த தாமோதரம்பிள்ளை குட்டித் தொல்காப்பியம் என்று இலக்கணப் புலவர்களால் புகழ்ப்பெறும் இலக்கண விளக்கத்தை 1889ஆம் ஆண்டு வெளியிட்டார்**



மூலம் சேனாவரையம் பதிப்பு ஒன்று வந்துள்ளதாகக் கூறித் தாமோதரம் பிள்ளையின் பெருமையைக் குறைகக முயன்றனா. ஆனால். அவாகள் தங்கள் முயறசியில வெற்றி பெறவில்லை. தொல்காப்பியச் சொல்லதிகாரம் சேனாவரையா உரையைப் பதிப்பித்ததன் மூலம் தமிழ் எனும் ஆழ்பெருங்கடலில தாமோதரம் பிள்ளை காலடி எடுதது வைத்துவிட்டாா என்று துணிந்து கூறலாம். தொல்காப்பியம் சொல்லதிகாரப் பதிப்புப்பற்றி (சேனாவரையம்) முன்பு 1847ஆம் ஆண்டில் மழைவை மகாலிங்க ஐயா தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை நச்சினார்க்கினியா உரையோடு வெளியிட்டார் என்பதனை இங்கே நினைவுகூாதல் பொருத்தமானது. ஏட்டுச்சுவடிகளிலிருந்து அச்சு வாகனத்திற்கு வந்த முதல்நூல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்தான். சேனாவரையத்தைப் பொறுத்த மட்டில் தாமோதரம் பிள்ளையே முதல் பதிப்பாசிரியா.

தொலகாப்பியச சொல்லதிகாரம் சேனாவரையததை அடுத்து 1881ஆம் ஆண்டு புத்தமித்திரனாா இயற்றிய வீரசோழியத்தைப் பெருநதேவனாா உரையுடன் தாமோதரம் பிள்ளை முதன்முதலாகப் பதிப்பித்தாா. அக்காலத்தில் வீரசோழியம் என்னும் பெயரைக் கேட்டதன்றிப் பலருக்கு அந்நூலில் பயிற்சியில்லை. பொனபறறிக் காவலனான புததமித்திரா இயற்றிய வீரசோழியம் தமிழ்மொழியை வடமொழி இலக்கணத்தோடு இணைக்க முயன்றுள்ளது. எழுத்து. சொல். பொருள். யாப்பு. அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் கூறும் இடைக்கால இலக்கண நூல் வீரசோழியம். இதனைப் பதிப்பித்ததன் மூலம் இநநூலை அவா அழிவின் வாயிலிருநது காப்பாற்றினாா. காவியாதாசம் என்னும் தண்டியாசிரியரின் வடமொழி நூல் வீரசோழியத்தில் அலங்காரப் படலம் என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வீரசோழியத்தைப் பணியில் இருநதபோதே தாமோதரம் பிள்ளை பதிப்பித்தாா. இப்பதிப்பின் வாயிலாகத் தமிழகத்தில் அறிஞர் பலருடைய பாராட்டுதல்களையும் அவா பெற்றாா. பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் (1882) பதிப்புப் பணியில் அவரால் தீவிரமாக ஈடுபட முடிநதது. வீரசோழியப் பதிப்புக்காக அவா ஏடுகளைத் தேடியபோது தணிகைப்புராணச் சுவடிகள் சில அவருக்குக் கிடைத்தன. ஏறகெனவே அவரிடம் தணிகைப்புராணத்தின் திருத்தமான சுவடியும் இருந்ததால அதனைப் பதிப்பிக்கத் தொடங்கினாா. இப்புராணம் தமிழ்ப் புராணங்களில் சிறப்பிடம் பெற்றதாகும். திருக்கயிலாயப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தைச் சாாந்த கச்சியப்ப முனிவரால இப்புராணம் பாடப்பட்டது. இப்புராணத்தைத் தாமோதரம் பிள்ளை 1883ஆம் ஆண்டில பதிப்பித்தாா. தாமோதரனாாக்குச் சைவ சமயத்தில் இருநத ஈடுபாட்டின் காரணமாக இநநூல் பதிப்பிககப்பட்டது எனலாம்.

தணிகைப்புராணத்தைப் பதிப்பித்த அதே ஆண்டில (1883) தாமோதரம் பிள்ளை இறையனாா அகப் பொருளுரையைப் பதிப்பித்தாா. இவ்வுரை வெளியான பின்னரே பாண்டியாகள் மதுரையில நிறுவிய மூன்று தமிழ்ச்சங்கங்கள் பற்றியும் அச்சங்கங்களில் வீற்றிருந்த புலவாகள்பற்றியும் அவாகளால் பாடப்பட்ட நூலகள் பற்றியும் இரண்டு கடல்கோள்களால் தலைச்சங்கமும். இடைச்சங்கமும் அழிந்தமைபற்றியும் தமிழ் மககளால் அறிய முடிந்தது. கடல்கோளின் வாய்ப்படாத நற்றிணை நானூறு தொடக்கமான கடைச் சங்க நூல்களாம் எட்டுத்தொகை நூல்கள்பற்றிய செய்தி இறையனாா அகப்பொருளுரையின் வாயிலாக உலகிற்குத் தெரியவந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மறுமலாச்சி தோன்றுவதற்குக் காரணமாக இப்பதிப்பு அமைநதது என்று கூறுவது பொருத்தமாகும்.

தொல்காப்பியச் சொலலதிகாரததைச் சேனாவரையா உரையுடன் பதிப்பித்த (1868) தாமோதரம் பிள்ளை தொடாநது தொலகாப்பிய ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கருப்பூரில் வாழ்நதபோது தொலகாப்பியப் பொருளதிகாரத்தை உச்சிமேற் புலவாகொள் நச்சினாாக்கினியா உரையுடன் 1885ஆம் ஆண்டில வெளியிட்டாா. ஏடு எழுதுவோரும் படிப்போரும் இல்லாத காரணத்தால் தொலகாப்பிய ஓலைச் சுவடிகள்யாவும் இராமபாணப் பூச்சிகளுக்கும் கறையான்களுக்கும் இரையாகி அழிகின்றனவே என்று கவலையோடு இப்பதிப்பில் தாமோதரனாா வருந்திக் கூறியுள்ளாா. இநநூலை வெளியிட்டவுடன் தம் குடும்பத்தில் நிகழ்நத துன்ப நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் மறந்து தாம் மிக்க ஆறுதல் அடைநததாகவும் அவா தெரிவித்துள்ளாா.

தொலகாப்பியப் பொருளதிகாரப் பதிப்பினால் அவருக்குப் பொருள் இழப்பு ஏற்பட்டது. இருந்தாலும். பதிப்பு முயறசியில் அவா ஊக்கம் குன்றாமல் உழைத்தாா. கலித்தொகையைப் பதிப்பிக்க விரும்பி இந்து ஆங்கில நாளேட்டின் வாயிலாக விளம்பரம் செய்தும் செல்வம் மிக்க பெரியோர்களுக்கு வேண்டுகோள் விடுத்தும் கிட்டிய பொருளைக்

CICTArchives

கொண்டு கலித்தொகையினை 1887ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்புக்குத் தேவையான பொருளில் பெரும்பகுதியைத் தாமோதரனாரின் நண்பரும் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அமைச்சருமாகத் திகழ்ந்த திரு. அ. சேஷைய சாஸ்திரி அவர்கள் கொடுத்து உதவினார் என்று கலித்தொகைப் பதிப்பில தாமோதரனார் குறிப்பிட்டுள்ளார்.

சங்க நூலகளில கலித்தொகைதான் முதன்முதலில் (1887) பதிப்பிக்கப்பட்டது. கறறறிநதார் ஏத்தும் கலி என்று புலவர்களால் போறறபபட்ட இத்தொகை நூலுக்கு நச்சினார்க்கினியரின் நயமான உரையும் கிடைத்துள்ளது. எட்டுத்தொகை நூல்களிலே விரிவான விளக்கமான சுவையான உரையைப் பெறறிருப்பது கலிததொகை ஒன்றேயாகும். தமிழ் இலக்கியத்தின் அகப்பொருள் மாட்சியை எடுத்துக்காட்டும் இநநூல் வெளியானதும் தமிழ் அறிஞர்களிடம் ஒருவிதமான உள்ளக் கிளர்ச்சியை அநநூல தோற்றுவித்தது. சி. வை. தாமோதரம்பிள்ளை ஏடு தேடலின் போது ஏறபட்ட அனுபவங்களை 'யான் முப்பதைந்து வருஷத்தின் முன் பிரமாதீத வருஷம் ஒரு தரம் அருமையான தமிழ் நூலகள் தேடி யாழ்ப்பாணத்தினின்று இககண்டததில் வந்து நடமாடியபோது, கடலூரில் மஞ்சக்குப்பத்திற சண்முக உபாத்தியாயரென்றோர் வயோதிகரும் புதுச்சேரியில் நெல்லித்தோப்பிற சொக்கலிங்க பிள்ளை யென்றோர் தமிழ்ப் பண்டிதருங் கலித்தொகை வைத்திருநதது என் ஞாபகத்திறகுவர. அந்த இடங்களிற சென்று விசாரித்தேன். முன்னையவர் இருநத இடமுந தென்படடிலது. பிள்ளையவர் இருநத இடத்தில விசாரித்து அவர் வமிசத்தில அவரது தௌகித்திரியுங் குடும்பமும் அடுத்த ஊரில் இருப்பதாகக் கேள்வியுற்று ஆங்கடைநது. தௌகித்திரியின் நாயகனை வினவிய போது, அவர் ஏதோ ஒரு கட்டுச சுவடிகள் பூர்வாசசிதமாக வைததிருககினறோம். நமககு அவறறின் பெயருநதெரியாது. தங்களுக்கு வேண்டியதிருந்தால் பார்தது எடுத்துக்கொள்ளலாமென்று மகா உதாரத்துவததோடு ஏட்டுக்கட்டை அளித்தனர். ஏடுகள் இருநத நிலைமை கண்டு யானுற்ற பரிபவத்திறகு என் விழியினின்று பெருகிய கணணீரே சாக்ஷி' என்று கலித்தொகைப் பதிப்புரையில் கூறியுள்ளார். தொலகாப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருளுரை என்று இலக்கண நூலகளைப் பதிப்பித்த தாமோதரம் பிள்ளை குட்டித் தொலகாப்பியம் என்று இலக்கணப் புலவர்களால் புகழப்பெறும் இலக்கண விளக்கத்தை 1889ஆம் ஆண்டு வெளியிட்டார். இநநூல் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவாரூர் வைத்தியநாத தேசிகரால இயறறபபட்டதாயினும் தொலகாப்பியத்தை விளக்கும் நூலாக அமைந்துள்ளதால் இதனைத் தாம் வெளியிட்டதாகத் தாமோதரனார் எழுதுகின்றார்.

வீரசோழியத்தை வெளியிட்ட அதே ஆண்டில் (1889) சூளாமணி என்னும் சமணக் காவியத்தைத் தாமோதரம் பிள்ளை வெளியிட்டார். ஐம்பெருங் காப்பியங்களில் சீவக சிந்தாமணியைப் போன்றே சூளாமணியும் ஒரு சிறநத காவியமாகும். தோலாமொழித்தேவர் என்னும் சமணமுனிவர் இக்காப்பியத்தை இயற்றியுள்ளார். இப்பதிப்பினைத் தாமோதரம் பிள்ளை வெளியிடுவதறகு இராங்கூனிலிருநத செலவர்கள் பொருளுதவி செய்துள்ளனர்.

தொலகாப்பியம் எழுததிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு தாமோதரனார் 1891ஆம் ஆண்டு வெளியிட்டார். தொலகாப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையோடு ஏறகெனவே மழைவை மகாலிங்கையரால (1847) வெளியிடப்பட்டதுபறறி மேலே நாம் சுட்டியுள்ளோம். அவ்வெளியீடு வநது ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் ஆகிவிட்டமையாலும் மழைவை மகாலிங்கையரின் எழுததிகாரப் பதிப்பு அக்காலத்தில மறுபதிப்பாகிக் கிடைக்காமையாலும் சொலலதிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் வெளியிட்ட தாமோதரனார் எழுத்ததிகாரத்தையும் வெளியிட வேண்டுமென்று தமிழ் ஆர்வலர்கள் வலியுறுத்தியதால் பலவேறு இடங்களிலிருந்து நச்சினார்க்கினியரின் எழுத்ததிகாரச் சுவடிகளைப் பெற்று மீண்டும் பதிப்பித்து அதனை வெளியிடலானார். அவர் பதிப்பித்து வெளியிட்ட நூல்களில் இது ஒன்றே அவரால் முதலில் பதிப்பிக்கப்படாத நூலாகும்.

கலிததொகையைப் பதிப்பித்த பிறகு எட்டுததொகை நூலகள் முழுவதையும் தாமோதரம் பிள்ளை பதிப்பிகக விரும்பினார் என்பதனை அவர் எழுதியுள்ள பதிப்புரைகளிலிருந்து அறிகின்றோம். அகநானூறறைப் பதிப்பிக்கும் முயறசியை 1897ஆம் ஆண்டு மேறகொண்டார். தமக்கு உதவியாகத் தமிழாசிரியர்கள் இருவரை நியமித்து அகநானூற்றுப் பாடல்களைப் பரிசோதித்து வந்தார். அகநானூறறில மணிமிடை பவளம் முடியவுள்ள 300 பாடல்களைப் பரிசோதித்துக் கொண்டிருநத நிலையில் அவர் உடல்நலம் மிகவும் குன்றிவிட்டது. எனவே அகநானூற்றுப் பதிப்பை முற்றுவிக்காமலே 1901ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் (01.01.1901) காலையில் தம் அறுபத்தொன்பதாம் வயதில் காலமானார்.

தாமோதரம் பிள்ளையின் வருகை தமிழ்மொழி ஆராயசசி வரலாற்றில ஒரு விடிவெள்ளியாகத் திகழ்கின்றது. பண்டைத் தமிழ் நூல்களைக் கறையான்களின் வாயிலிருந்து காப்பாறறி அவறறை வெளி உலகுக்குக் கொண்டுவநது தமிழின் தொன்மையை - பெருமையை - சிறப்பை நிலை நாட்டியவர் தாமோதரம் பிள்ளை. யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ்நாட்டிறகுப் புலம்பெயர்ந்து வநத அவர் எத்துணைச் சிறப்பான பணியை ஆறறியுள்ளார் என்று நாம் வியக்கின்றோம். இன்று தமிழ்மொழி செம்மொழி என்று எலலோராலும் ஏறறுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழின் செம்மொழித்தகுதியை நிறுவுவதறகுக் காரணமாக இருக்கும் அடிப்படை நூலகளை அழிவின் வாயிலிருநது மீட்டெடுத்து உலகிறகு வழங்கிய வள்ளலாகத் திகழ்கின்றார் சி. வை. தாமோதரம் பிள்ளை. சி. வை. தாமோதரம் பிள்ளையின் இவ்வரிய பணிகளைத் தமிழுலகம் என்றும் நன்றியுடன் நினைநது போறறும்.

CICTArchives

# பணிக்குழாம்

**பேராசிரியர் க. இராமசாமி**
பொறுப்பு அலுவலர்

**முதுநிலை ஆய்வறிஞர்**
பேரா. இ. சுந்தரமூர்த்தி

**ஆய்வறிஞர்கள்**
பேரா. ப. மருதநாயகம்
முனைவர் கா. கோ. வேங்கடராமன்
முனைவர் இரெ. குமரன்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் கா. உமாராஜ்
முனைவர் ச. மனோகரன்
முனைவர் அன்னி தாமசு
பேரா. இரா. கோதண்டராமன்
பேரா. கு. சிவமணி
முனைவர் ந. அரணமுறுவல்

**இணை ஆய்வறிஞர்கள்**
முனைவர் கூ. மு. புவனேஸ்வரி
முனைவர் மு. இராமகிருஷ்ணன்

**நிரலாளர்கள்**
திரு சு. கார்த்திகேயன்
திரு த. செந்தில்குமார்
திரு இரா. அகிலன்
திரு அ. முருகசுவாமிநாதன்

**இணைய வடிவமைப்பாளர்**
திரு ச. குணசேகரன்

**கணினி நிருவகிப்பாளர்**
இரா. சுந்தரகணபதி

**முதுநிலை எழுத்தர்கள்**
திரு கோ. புண்ணியமூர்த்தி
திரு ஜா. வா. பாஸ்கரன்

**இளநிலை எழுத்தர்கள்**
திரு மோ. முருகானந்தம்
திரு க. பெருமாள்

**முதன்மை ஆய்வு வல்லுநர்கள்**
முனைவர் ம. ச. நாகராஜன்
முனைவர் கி. ஜெயகுமார்
முனைவர் வ. மாரியப்பன்
முனைவர் யு. ஜெயபாரதி
முனைவர் சு. சௌந்தரபாண்டியன்
திரு கோ. செந்தில்நாதன்
திரு கி. கண்ணன்
திரு ச. ராஜேஷ்குமார்
திரு கோ. சதீஷ்
திரு கோ. உத்திராடம்
திருமதி ம. தாமரைச் செல்வி

**முதுநிலை ஆய்வு வல்லுநர்கள்**
முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி
முனைவர் ப. கண்ணதாசன்
முனைவர் சுப. வேல்முருகன்

**இளநிலை ஆய்வு வல்லுநர்கள்**
திரு சு. ஏழுமலை
திரு கோ. சீனிவாசன்
திரு பெ. முத்துசாமி
திரு மு. செல்வதுரை
திரு கு. இராஜசேகரன்
செல்வி சீ. நாகவர் அம்மாள்
திரு ச. தமிழ்ச்செல்வன்
செல்வி மோ. அனுசூயா
திரு சே. கரும்பாயிரம்
திரு த. சரவணன்
செல்வி த. லலிதமாலா
திரு இரா. வெங்கடேசன்
திரு ந. பெரியசாமி
முனைவர் ம. தமிழ்வாணன்
திரு இரா. குமாரசாமி
திரு அ. ஆரோக்கியதாஸ்
திரு வே. அழகுமுத்து
திரு ம. நாகராஜன்
முனைவர் மா. சுசிலா
திரு த. பூவைசுப்பிரமணியன்
திரு பா. இராஜா
திரு சி. இராமச்சந்திரன்

**தரவு உள்ளீட்டாளர்கள்**
திரு வெ. சிவப்பிரகாசம்
செல்வி இர. ஜெயந்தி
திரு க. சங்கர்
செல்வி வெ. காயத்ரி
செல்வி இர. நளினா
செல்வி பா.கல்பனா
திரு அ. முருகேசன்


**மெய்ப்புத் திருத்துநர்கள்**
திருமதி டி. சுபாஷிணி
திரு கோ. இராஜதுரை

**அனுப்புகை எழுத்தர்**
திரு ம. கோவிந்தன்

**காவலர்கள்**
திரு அ. ஆறுமுகம்
திரு ச. பாபு

**துப்புரவுப் பணியாளர்கள்**
திருமதி ந. ஜெயலட்சுமி
திருமதி ம. சுமித்ரா

CICTArchives



தொல்காப்பியம்

எட்டுத்தொகை
- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

பத்துப்பாட்டு
- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு
- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்